Digitized by Viruba

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியின்

# சீர்கேடு

★

# THE MANIFOLD DEFECTS

OF

# The Madras University Tamil Lexicon

★

ஞா. தேவநேயன்

Digitized by Viruba

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியின்

# சீர்கேடு

மதுரைப் பண்டிதன், நெல்லைப்புலவன், சென்னைப்
புலவ (வித்துவ) கலைத்தலைவன் (M. A.),
ஒய்வுபெற்ற சேலம் நகராண்மைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியன்
ஞா. தேவநேயன்
எழுதியது

1961

பதிப்புரிமை ] [ விலை 75 புதுச்சல்லி

Digitized by Viruba


# முகவுரை

ஒரு மொழியின் பெருமை அல்லது வலிமை அதன் சொல்வளத்தால் அறியப்படும். சொல்வளத்தைக் காட்டுவது அகராதியென்னும் சொற்களஞ்சியம்.

பிறநாடுகளிலெல்லாம், தன்மொழி செம்மொழியாயின், அதற்கே முதலிடமும் உயர்வும் தரப்படும். தமிழ்நாட்டிலோ, தன் மொழி உயர்தனிச் செம்மொழியாயிருந்தும், அது அயலாரால் மட்டுமன்றித் தமிழராலும் மறைக்கப்பட்டும் குறைக்கப்பட்டும் பழிக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றது.

வயவர் (Sir) **பிரடெரிக்கு நிக்கல்சன்** என்னும் துரைமகனாரின் தூண்டுதலின்மேல், சென்னைப் பல்கலைக்கழகம் 1913 முதல் 1939 வரை 27 ஆண்டுகளாக 4, 10, 100 உருபா செலவழித்து, ஒரு தமிழகராதி தொகுத்தது. அது சிலவகையில் முந்திய சொற்களஞ்சியங்களினும் மிக விரிவுபட்டதாயிருந்தும், அதைத்தலைமையாயிருந்து தொகுத்தவரின் தகுதியின்மையால், பலவகையில் மிகக்குறைபாடுள்ளதும் தமிழுக்குக் கேடானதுமாக முடிந்தது. அதன் ஆறு மடலங்களுள் (Vols.) ஐந்து வெளிவந்தபின், 1934–இல், அவ்வைந்திலுமில்லாத இருநூறு சொற்களைத் தொகுத்து, அதன் பதிப்பாசிரியரான திரு. **வையாபுரிப் பிள்ளை**யவர்கட்கனுப்பினேன். அவர்கள் என் பெயரைச் சொல்லுதவினார் பட்டியிற் சேர்க்காது கருத்துதவினார் பட்டியில்மட்டும் சேர்த்துக்கொண்டு, அகராதியின் ஒரு தொகுதியை இலவசமாக எனக்கு அனுப்புவித்தார்கள். ஆயின், மாதம் நூறுருபாச் சம்பளத்தில் என்னை ஈராண்டிற்கு அமர்த்திக்கொண்டால், ஆயிரக்கணக்கான சொற்களைத் தொகுத்துத்தரமுடியும் என்று நான் இட்ட கருத்தை, அவர்கள் முற்றும் புறக்கணித்துவிட்டார்கள். அதனால், மேற்கொண்டு ஒன்றும் அனுப்பவில்லை. இது நான் திருச்சியிலிருந்தபோது நிகழ்ந்தது.

நான் சேலங்கல்லூரி சென்றபின், 'A Critical Survey of the Madras University Tamil Lexicon' என்னும் பெயரால், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் ஐம்பாற்பட்ட 41 வகைக் குற்றங்குறைகளை எடுத்துக்காட்டுடன் ஆங்கிலத்தில் எழுதி அச்சிட்டுச் சுவடி வடிவில், 17—6—1955 அன்று, ஓர் ஆராய்ச்சித்திறனாய்வைச் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவிற்கனுப்பினேன். இன்றுவரை அதனிடமிருந்து எவ்வகை மறுமொழியுமில்லை.

ஈராண்டிற்குமுன், பண்டாரகர் (Dr.) **சேதுப் பிள்ளை**யவர்களிடம் இதைப் பற்றிக் கேட்டபோது, அவர்கள், "சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியைப் பற்றி நீங்கள் எழுதிவிடுத்த திறனாய்வு குறித்து பர். (Dr.) **இலக்குமணசாமி முதலியார்** அவர்கள் என்னைக் கேட்டார்கள். நான் 'அவ்வகராதியில்

Digitized by Viruba



இரண்டொரு குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றை அடுத்த பதிப்பில் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டேன்.' • என்று (தங்கட்கியல்பான வேறு நடையில்) தங்கள் பதவிச்செருக்கினால் துணிச்சலாகச் சொன்னதினின்று, பர். இலக்குமணசாமி முதலியார் அவர்கள் எத்துணை ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள் என்றும், நான் எவ்வளவு மறைக்கப்பட்டுள்ளேன் என்றும் கண்டுகொண்டேன். இனி பிள்ளை அவர்கள் முதலியார் அவர்களிடம் நேரில் என்ன சொன்னார்களோ, அது இறைவனுக்குத்தான் தெரியும்.

1956–ஆம் ஆண்டு சூலை மாதம், தமிழ்வேர்ச்சொல் அகராதித் தொகுப்பிற்கென்றே, அரசவயவர் (Rajah Sir) **முத்தையாச் செட்டியார்** அவர்களின் சிறப்பதிகாரத்தினாலும் தமிழ்ப்பற்றினாலும், வலுத்த எதிர்ப்பிற்கிடையே, அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறையில் வாசகனாக (Reader) அமர்த்தப்பெற்றேன். ஆயின், என்வேலையை மேற்பார்க்கும் தகுதி **மறைமலையடிகட்கு**ப்பின் எவருக்கும் இல்லாவிடினும், அத்தகுதியுடையதாக அமர்த்தப்பட்ட குழுவின் தலைவரான வங்கப்பெருமான் பர் (S.K.) **சட்டர்சி** இட்ட பணியைச் செய்யவேண்டியிருந்ததினால், முதலீராண்டு அகராதித் தொகுப்பில் ஈடுபடமுடியவில்லை.

அச்சன் என்பது அத்தன் (தந்தை) என்பதன் திரிபான தென்சொல் என்றும், தமிழர் முழுகிப்போன குமரிக்கண்டத்தில் தோன்றி வடக்கே சென்றனர் என்றும் நான் எழுதியதை மறுத்து, அச்சன் என்பது வடசொற்றிரிபென்றும் (ஆர்ய > அஜ்ஜ (பிராகிருதம்) > அச்சன்), தமிழர் நண்ணிலக் கடற்கரையினின்று (Mediterranean Region) வந்தவரென்றும், பர். சட்டர்சி கூறியதை நான் ஒப்புக்கொள்ளாமையால், 1958–இல் பொதுவாராய்ச்சித் துறைக்கு மாற்றப்பட்டேன். அதிலிருந்து மூவாண்டிற்குள், நான் கடந்த 30 ஆண்டுகளாகச் செய்துவந்த சொல்லாராய்ச்சி மொழியாராய்ச்சியின் பயனாகத் தொகுத்தனவும், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியில் இல்லாதனவுமான, 4500 தனிச்சொற்களையும் தொடர்ச்சொற்களையும் பட்டியெடுத்து அவற்றை (1) தனிச்சொல்லும் கூட்டுச்சொல்லும் (Simple and Compound Words), (2) மரபுத்தொடர்மொழிகள் (Idioms and Phrases), (3) இணைமொழிகள் (Words in Pairs) என மூவகையாகப் பாகுபடுத்தி, அவற்றுள் 2500 தனிச்சொற்கும் கூட்டுச்சொற்கும் ஆங்கிலத்திலும் தமிழிலும் அகராதி முறையிற் பொருளெழுதிக் கொடுத்தும் மேற்கொண்டு ஓராண்டிருந்து யான் மேற்கொண்ட வேலையை முடிக்காவண்ணம், என் அறுபதாம் அகவை முடியுமுன்னரே, கல்வியாண்டுத் தொடக்கத்தில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினின்று விலக்கப்பட்டு விட்டேன்.

அறிவாராய்ச்சி மிக்க இக்காலத்தில், தமிழ்நாடு முழு விடுதலையடைந்துவிட்டதாகத் தருக்கி மகிழும் இக்காலத்தில், தமிழாட்சியும் தமிழ் வாயிற்

Digitized by Viruba



கல்லூரிக் கல்வியும் வந்துவிட்டனவென்று தம்பட்டமறையும் இக்காலத்தில், தகுதிபற்றியே வேலையளித்தல் வேண்டுமென்று மிகுதியாகக் கூக்குரலிடும் இக்காலத்தில், தமிழாக்கத்திற் கின்றியமையாததும் என்னையன்றி வேறெவரும் செய்யவியலாததுமான தென்சொல் தொகுப்பை, சென்னைப் பல்கலைக் கழகத்திலன்றித் தமிழ் வளர்ச்சிக்கென்றே ஏற்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் செய்தற்கிடமின்றேல், தமிழுக்குத் தமிழ் நாட்டிலும் இடமில்லையென்றே தெரிய வருகின்றது.

புக்கி லமைந்தின்று கொல்லோ சிலரிடைத்
துச்சி லிருந்த தமிழ்க்கு !

புலவரும் பொதுமக்களும், தமிழுக்கு இலங்கையிற் போன்றே இத்தன்னாட்டிலும் ஏற்பட்டுள்ள இரங்கத்தக்க நிலையை நோக்கி, 'என்றுமுள தென்றமிழ்' என்னும் கம்பர் கூற்றுப் பொய்க்காவண்ணம், தமிழ் தமிழாதற்கும் என்றுந் தமிழாயிருத்தற்கும் விரைந்து ஆவன செய்வாராக.

புதுவை
20—8—1961.

ஞா. தே.

Digitized by Viruba


# குறுக்க விளக்கம்.

இ. இந்தி
எ. டு: எடுத்துக்காட்டு
ஒ. நோ: ஒப்பு நோக்க.
க. கன்னடம்
த. தமிழ்.
த. ப. பெ. தன்மைப் பன்மைப் பெயர்
திரு. திருவாளர்.
ப. க. பல்கலை
ப. க. க. த. பல்கலைக் கழகத் தமிழ்
பி. பிராகிருதம்
பெ. பெயர்ச்சொல்
பெ. எ. பெயரெச்சம்
வ. வடசொல்
வி. வினைச்சொல்
வி. எ. வினையெச்சம்

H. Hindi.
L. Latin.
M. S. D. Monier William's Sanskrit-English Dictionary.
P. Persian.
T. Telugu.
U. Urudu.

# குறி விளக்கம்.

- கூட்டுச்சொல்லிடைக்கோடு
— வலமுறைத்திரிவுக்குறி, பொருட்பாட்டுக்குறி.
= சமக்குறி, பொருட்பாட்டுக்குறி
> வலமுறைத்திரிவுக்குறி
< இடமுறைத்திரிவுக்குறி
\+ சொற்புணர்ச்சிக்குறி

பொருட்பாடு = Meaning.
திரிவு = Derivation.

Digitized by Viruba



## உள்ளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| முகவுரை | I |
| முன்னுரை | VIII |
| நூல் :— | |

**I. சொல்வழுக்கள்**

| | | | பக்கம் |
|---|---|---|---|
| **1.** | **சொல்லின்மை** | | 1 |
| | (1) தனிச்சொல் | ... | 1 |
| | (2) கூட்டுச்சொல் | ... | 2 |
| | (3) மரபுவினைச் சொல் | ... | 3 |
| | (4) இணைமொழி | ... | 4 |
| **2.** | **சொல்லின் மறுவடி வின்மை** | ... | 5 |
| **3.** | **சொல்லின் இலக்கண வகை வடிவின்மை** | ... | 5 |
| | (1) செயப்படுபொருள் குன்றிய வினை | ... | 5 |
| | (2) நிகழ்கால வினையெச்சம் | ... | 6 |
| **4.** | **கூட்டுச்சொல்லின் உறுப்பைத் தனியாகக் கூறுமை** | ... | 6 |
| **5.** | **மிகைபடு சொற்கள்** | ... | 6 |
| **6.** | **விளக்கமேற்கோளில் வருஞ்சொல்லைக் குறியாமை** | ... | 7 |
| **7.** | **சொல்லின் கொச்சை வடிவைச் சொல்வரிசையிற் சேர்த்தல்** | ... | 7 |
| | (1) கொச்சை வடிவுமட்டும் | ... | 7 |
| | (2) கொச்சை வடிவும் திருந்திய வடிவும் | ... | 8 |
| | (3) திருந்திய வடிவும் கொச்சை வடிவும் வேற்றுமொழி வடிவும் | ... | 9 |
| **8.** | **சொல்லின் வழுவடிவைக் குறித்தல்** | ... | 9 |
| **9.** | **குறிக்கவேண்டாத சொல்லைக் குறித்தல்** | ... | 10 |
| **10.** | **தமிழுக்கு வேண்டாத வேற்றுச் சொல்லைக் குறித்தல்** | ... | 10 |
| | (1) தன்னெழுத்துச் சொல் | ... | 10 |
| | (2) வேற்றெழுத்துச் சொல் | ... | 11 |
| | (3) ஈரெழுத்திலும் வேற்றுச்சொல் | ... | 12 |
| | (4) பல்வடிவு வேற்றுச்சொல் | ... | 12 |
| **11.** | **இனச்சொல் இன்மை** | ... | 15 |
| **12.** | **திசைச்சொல் இன்மை** | ... | 15 |
| **13.** | **எழுத்துக் கூட்டல் வழு** | ... | 15 |
| **14.** | **ஆங்கிலத்தில் எழுத்துப் பெயர்ப்பு முறைத்தவறு** | ... | 16 |

Digitized by Viruba



## II. பொருள் வழுக்கள்


| | | | |
|---|---|---|---|
| 1. | இயல்விளக்கம் அல்லது சொற்பொருள் தமிழிற் கூறப்பெறுமை | ... | 16 |
| 2. | குன்றக் கூறல் | ... | 17 |
| 3. | மிகைபடக் கூறல் | ... | 17 |
| 4. | வழுப்படக் கூறல் | ... | 18 |
| 5. | சிலபொருள் கூறப்படாமை | ... | 20 |
| 6. | பொருள்வரிசையின்மை | ... | 21 |
| 7. | வடமொழியிற் பொருள் கூறல் | ... | 22 |
| 8. | ஒரு பொருட் பலசொற்களின் வேறுபாடு காட்டாமை | | 22 |
| 9. | எதிர்ச்சொற்களின் வேறுபாடு காட்டாமை | ... | 24 |
| 10. | எடுத்துக்காட்டின்மை | ... | 24 |
| 11. | கூறியது கூறல் | ... | 24 |


## III வேர் வழுக்கள்


| | | | |
|---|---|---|---|
| 1 | தென்சொல்லை வடசொல்லெனல் | ... | 25 |
| 2. | சொல்வேர் காட்டாமை | ... | 31 |
| 3. | வழுவேர் காட்டல் | ... | 31 |
| 4. | ஐயுற்றுக் கூறல் | ... | 32 |
| 5. | தலைமாற்றிக் கூறல் | ... | 32 |
| 6. | கூட்டுச்சொல்லை வழுப்படப் பிரித்தல் | ... | 33 |
| 7. | ஒரு சொல்லைப் பல சொல்லாகக் காட்டல் | ... | 34 |
| 8. | பல சொல்லை ஒரு சொல்லாகக் காட்டல் | ... | 34 |
| 9. | தொழிற் பெயரின் திரிபே முதனிலை யெனல் | ... | 35 |


## IV இலக்கண வழுக்கள்


| | | | |
|---|---|---|---|
| 1. | இலக்கணக் குறிப்பு வழு | ... | 37 |
| 2. | ஏவல் வினையின் எண் குறியாமை | ... | 37 |


## V மரபு வழுக்கள்


| | | | |
|---|---|---|---|
| 1. | சொல் வழு | ... | 37 |
| 2. | உருபு வழு | ... | 38 |

Digitized by Viruba


VI அகராதியமைப்பு வழுக்கள்

1. ஒரேயளவான எழுத்தால் எல்லாச் சொற்களையுங் குறித்தல் ... 38
2. பிறந்தையின் கீழ் இனங்களையும் இனத்தின் கீழ் வகைகளையும் காட்டாமை ... 38

VII அகராதியாசிரியர் குறைகள்

(1) தமிழ்ப்பற்றின்மை ... 39
(2) தவருன கருத்துடைமை ... 39
(3) கவனமின்மை ... 39
(4) சொற்றெருகுப்பு முறையறியாமை ... 39
(5) தொல்காப்பியர் கூற்றைப் பிறழவுணர்தல் ... 40
(6) புலாலுண வறியாமை ... 41

VIII சென்னைப் பல்கலைக்கழக அமைப்புக் குறைகள்

(1) அதிகாரிகளைப் பற்றியவை. ... 43
(2) தமிழ்த்துறைத் தலைவரைப்பற்றியவை. ... 43

Digitized by Viruba



# முன்னுரை

## சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியின் சிறந்த நோக்கங்கள்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதி அதைத் தொகுத்தவரின் தவற்றினால் மிகச் சீர் கெட்டிருப்பினும், அதன் நோக்கங்கள் மேனாட்டறிஞரால் வகுக்கப்பட்டதினால், மிக மேம்பட்டவையாயுள்ளன. அவையாவன:—

1. "இவ்வகராதி, சமணம், மருத்துவம், கணியம் முதலிய பல்துறையிலக்கியங்களில் வரும் கலையியற் சொற்கட்கும் அருகிய வழக்குச் சொற்கட்கும் கவனமாகப் பொருள் விளக்கியும், நெருடான சொற்களை விரிவாக ஆராய்ந்தும், மரபு நெறிப்பட்ட தமிழ்ப் புலவரின் கருத்திற்கு ஒத்ததாயிருத்தல் வேண்டும்."

2. "இது, தமிழுக்கும் பிற மொழிகட்கும் இடைப்பட்ட மொழியியலுறவை எடுத்துக் காட்டி, மேலையறிஞரின் சிறந்த கருத்தை நிறைவேற்றுவதாயிருத்தல் வேண்டும்.

3. "இது, உலக வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் வழங்கும் சொற்களை ஆங்கிலச் சொற்களையும் மரபையுங்கொண்டு தெளிவாக விளக்கி, தமிழ் மக்களுட் பெரும்பாலார்க்கும் ஆங்கிலமறிந்தோர்க்கும் பயன்படுமாறு, துல்லியமும் நிறைவும் இக்காலத்திற்கேற்றதுமான அகராதியாயிருத்தல் வேண்டும்."

இந்நோக்கங்கள் தம்மளவில் தலைசிறந்தனவாயினும், இவற்றை நிறைவேற்றும் நிலைமை சென்னைப் பல்கலைக் கழகத்தில் இருந்ததில்லை. அதனாலேயே பின்வரும் குற்றங்குறைகள் நேர்ந்துள்ளன

Digitized by Viruba

# சீர்கேடு

## I சொல்வழுக்கள்.

### 1. சொல்லின்மை.

சென்னைப் ப. க. க. த. அகராதியின் முப்பெருங்குறைகளுள், முதலது பல்வகைச் சொல்லின்மையாகும்.

எடுத்துக்காட்டு :

(1) தனிச்சொல்

அழுக்கலான், பெ. ஒரு மருந்துச்செடி.
அரணை, பெ. எதிர்.
இள — த்தல், வி. மென்மையாதல்.
உரம்பு, பெ. ஒரு பூண்டு.
ஊதி, பெ. இசைக்குழல்.
கருத்தை, பெ. கரிய பெண் அல்லது காளை.
காம்பு — தல், வி. அரிசி, பயறு, முதலிய உணவுப்பொருள்கள் நீண்ட நாட்குப்பின் சுவையற்றுப்போதல்.
குமுறி, பெ. ஒருவகைப்புறா.
குன்னு — தல், வி. ஒடுங்கியிருத்தல்.
கூந்தை, பெ. நுங்கெடுத்த பனங்காய்.
சிலுப்பி, பெ. சிறு மத்து.
சிவத்தை, பெ. சிவப்பாயிருக்கும் பெண் அல்லது காளை.
சின்னான், பெ. சிறுவன், சில்லாளி.
தக்கட்டி, பெ. ஒருவகைச் சிறுகனி, கண்பட்டையில் வரும் சிறு கட்டி, (Sty).
தகைப்பு, பெ. யாழின் ஓர் உறுப்பு.
தொளுமான், பெ. ஒரு வகை மீன்.
நாங்கள், த. ப. பெ.
நெக்கினி, பெ. ஒருவகை மரம்.
நோங்கு — தல், வி. ஓரிடத்துக்குப் போகுமாறு உள்ளத்தால் அதை நோக்குதல்.
பரக்கை, பெ. அநாகரிகமாய்த் தன்னை அலங்கரித்துக்கொள்ளும் பெண்.

Digitized by Viruba



புக்கா, பெ. ஒரு வகைப் புரு.
புடங்கு, பெ. நீண்ட மண்டையின் பின்புறம்.
பொண்டான் பெ. எலியின் மறைவான பக்கவளை.
போஞ்சான், பெ. போலி (வேலை).
போந்தான், பெ. பெருங்கோழி.
மீ — தல், வி. மீந்திருத்தல்.
மீ — த்தல், வி. மீத்து வைத்தல்.
மே — மாள்(ளு)தல், வி. சிறுநீர் பெய்தல்.
யாங்கள், த. ப. பெ.
வழமை, பெ. வழக்கம்.

## (2) கூட்டுச்சொல்.

அசையாரக்கட்டை, பெ. ஒரு வகைச்செடி.
அஞ்சறைப்பெட்டி முறுக்கு, பெ. கெண்டி முறுக்கு.
அடங்காமரம், பெ. ஒரு வகை மரம்.
உப்புத் தீயல், பெ. ஒரு வகைக் கருவாட்டுச்சாறு.
உலையாப்பம், பெ. ஒரு வகை ஆப்பம்.
ஒட்டியடைந்த நேரம், பெ. கன்று காலிகளைத் தொழுவிலடைக்கும் மயங்கு பொழுது.
கவைமகன், பெ. உடலொட்டிய இரட்டைப்பிள்ளை. (Siamese twins)
கருங்களமர், பெ. உழுதுண்ணும் வேளாளர், பண்ணையாட்கள்.
காரொக்கல், பெ. வறிய சுற்றம்.
குச்சுக்கிழங்கு, பெ. மரவள்ளிக்கிழங்கு (Tapioca).
கொறு கலப்பை, பெ. ஒரு விண்மீன் கூட்டம் (Orion).
கோட்டான்காய், பெ. கூகைக்காய்.
சட்டாரொட்டா, பெ. ஒருவகைக் கடல் மீன்.
செஞ்செவ்வாப்பு, பெ. புதிதாய்ப் பிறந்த குழந்தையுடம்பில் செம்படைகள் தோன்றும் நோய் நிலை. கருஞ்செவ்வாப்பினும் வேறானது.
தலைவெட்டிக் கருவாடு, பெ. தலையில்லாது விற்கும் ஒருவகைக் கருவாடு.
நாய்ச்சுறு, பெ. ஒருவகைச் சுறுமீன்.
பத்தநடை (பற்றுநடை), பெ. கமலையேற்றத்தில் காளைகள் கூனையை இழுத்துச் செல்லும் இறக்கம்.
பேய் வெள்ளரி, பெ. தீய வெள்ளரி.
போரவை, பெ. பண்டைப் போர்ப்பயிற்சிக் கூடம்.
மயிர்க் கிழங்கு, பெ. வேர்க்கிழங்கு (சிறுவள்ளிக்கிழங்கு).

Digitized by Viruba


மூரண்களரி, பெ. போரவை.
மூவடிமுக்கால், பெ. வெண்பாவிற்கொரு பெயர்.
வண்ணான் தாழி, பெ. ஒரு வகை விளையாட்டு.
வறட்பனி, பெ. ஈரமில்லாப்பனி.
வெள்ளப்பம், பெ. ஒரு வகை அப்பம்.
வேப்பிலைக்கெண்டை, பெ. கெண்டை மீனின் ஒருவகை.
வைத்தூற்றி, பெ. எண்ணெயூற்றும் கருவி (Funnel) (நா.).

சென்னைப் ப. க. க. த. அகராதியில் விடப்பட்டுள்ள கூட்டுச் சொற்களின் மாபெருந்தொகையை, பின்வரும் இரு சொல்வரிசைகளை நோக்கிக் காண்க.

அகவிஞை
அஞ்சுமணிப்பூ
அடக்கவிலை
அடித்துப்பிடுங்குகிற சுத்தியல்
அணைகல்
அந்தரக்கோல்
அமிஞை
அரங்கொழி செய்யுள்
அரசப்பள்ளி
அரசிலை வாளி
அரிசிக்களா
அரிசித்தழுப்பு
அரிப்பு வலை
அல்லித்தேங்காய்
அவக்காச்சி
அறுவாள்

அரைக்காற்சட்டை
அரைக்கைச்சட்டை
அரைச்சாப்பாடு
அரைச்சாப்பு
அரைச்சீட்டு
அரைச்சீர்
அரைத்தவளை
அரைப்பட்டம்
அரைப்பள்ளி
அரைப்புள்ளி
அரைப்பேச்சு
அரையெழுத்து
அரைவகுப்பு
அரைவயிறு
அரைவெட்டு
அரைவேக்காடு

## (3) மரபுவினைச்சொல்

அடித்துப்பேசுதல்
அடித்தொண்டையிற் பேசுதல்
அடிமடியில் நெருப்பைக் கட்டுதல்
அடிமேலடியடித்தல்
அடியெடுத்துக் கொடுத்தல்
அடுத்துக்கெடுத்தல்
ஒடித்துக் கேட்டல்
கல்விப்பேசுதல்

Digitized by Viruba


கொடித்தட்டல்
சும்மாயிருத்தல்
தாக்குப்பிடித்தல்
நட்டுக்கொண்டு நிற்றல்
பழைய பல்லவி பாடுதல்
மொல்லையிற் போடுதல்
வாய்க்குங் கைக்குமாயிருத்தல்

சிலர், இத்தகைய தொடர்ச் சொற்கள் அகராதியில் இடம் பெறலாமா வென்று கருதலாம். வீடும் விளக்குமாய் வைத்தல், வெட்டொன்று துண்டிரண்டாகப் பேசுதல் முதலிய தொடர்ச் சொற்கள் சென்னையகராதியில் இடம் பெற்றிருப்பதைக் காணின், அவர் அங்ஙனங் கருதார்.

**(4) இணைமொழி**

அச்சலத்தி புச்சலத்தி
அஞ்சிலே பிஞ்சிலே
அடக்கவொடுக்கம்
அடிப்பும் அணைப்பும்
அடுப்புந் துடுப்பும்
அண்டபிண்டம்
அண்டை வீடு அடுத்த வீடு
அயர்த்தது மறந்தது
அருமை பெருமை
அரைவயிறுங் குறைவயிறும்
அலுக்கிக் குலுக்கி
அலுத்துப் புலுத்து
அலைத்துக் குலைத்து
அழன்று குழன்று
அழிந்து ஒழிந்து
அழுகையுங் கண்ணீரும்
அழுங்கிப்புழுங்கி
அழுத்தந்திருத்தம்
அழுதுதொழுது
அறிந்துதெரிந்து
அறிவு ஆற்றல்
அறுக்கப் பொறுக்க
அன்று மறுநாள்
அன்னந் தண்ணீர்
அன்னலுந் துன்னலும்

நெல்லை மாவட்டத்தில் நாட்டுப்புறத்து மூதாட்டியர் பேச்சில், இணைமொழிகள் அணியணியாய் அமைந்து கிடக்கின்றன.

**எ. டு:** அரிசி தவசி
கன்று கயந்தலை
காணங் கப்பி
கேப்பை கொட்டி
சோளஞ் சொங்கு
தூசி துப்பட்டை

Digitized by Viruba


நன்னியுங் குன்னியும்
பம்பை பறட்டை
பயறு பச்சை
புல் புளிச்சி
மயக்கமுந் தியக்கமும்
மரம் மட்டை
விறகு வெங்கழி
விருந்து வேற்று

இத்தகைய இணைமொழிகள் அகராதியிலில்லாதன ஐந்நூற்றிற்கு மேலுள்ளன.

சென்னையகராதி சில பழக்க வழக்கங்களைக் குறிக்கும்போது, அவற்றிற்குரிய பெயரையன்றி வினையைக் குறித்திலது.

எ. டு: குறிக்கப்பட்ட பெயர். — விடப்பட்ட வினை.

| குறிக்கப்பட்ட பெயர் | விடப்பட்ட வினை |
|---|---|
| கொடும்பாவி | கட்டியிழுத்தல் |

## 2. சொல்லின் மறுவடிவின்மை.

சில சொற்களின் மறுவடிவம் சென்னை யகராதியிற் குறிக்கப்படவில்லை.

எ. டு:

| குறிக்கப்பட்ட வடிவம். | விடப்பட்ட வடிவம். |
|---|---|
| அடுப்பங்கரை | அடுப்பங்கடை |
| அடைக்கலாங்குருவி | அடைக்கலத்தான் |
| எத்தாப்பு | ஏத்தாப்பு |
| கணியான் | கணியன் |
| கரட்டான் | கரட்டை |
| குறவை | குறத்தை |
| கொட்டன் | கொட்டலான் |
| துடுமை | துடும்பு |
| தொலி | தொலும்பு |
| நீ | நீன் |
| பத்து மாற்றுத் தங்கம் | பத்தரை மாற்றுத் தங்கம் |
| வே | வேகு |
| வேகவை | வேவி |

## 3. சொல்லின் இலக்கண வடிவின்மை.

(1) செயப்படுபொருள் குன்றிய வினை

Digitized by Viruba


| குறிக்கப்பட்ட செய் பொருள் குன்றுவினை வடிவம் | விடப்பட்ட செய்பொருள் குன்றிய வினைவடிவம் |
|---|---|
| உணத்து | உண. |
| உணத்தல் காய்தல். | உணத்துதல் காயவைத்தல். |

உசும்பு, உசுப்பு என்னும் இரண்டும், முறையே, ஒரு பொருள் பற்றிய தன் வினையும் பிறவினையுமாகும். உசுப்பு என்பதற்கு எழுப்புதல் என்னும் பொருள் குறிக்கப்பட்டிருக்கின்றது. ஆயின், உசும்பு என்னுஞ் சொற்கு துயிலுணர்தல் அல்லது துயிலுணரத் தொடங்குதல் என்னும் பொருள் குறிக்கப்படவில்லை.

### (2) நிகழ்கால வினையெச்சம்

சில வினைகளின் நிகழ்கால வினையெச்சவடிவம் மரபு வினையெச்சமாக வழங்கி வருகின்றது. அது தனியாக எடுத்துக் கூறப்படவில்லை.

எ.டு: அண்ணக்க, மேலாக.
அண்ணக்கக் குடித்தான், மேலாக எடுத்தான் என்னும் வழக்குக்களை நோக்குக.

## 4. கூட்டுச்சொல்லின் உறுப்பைத்தனியாகக் கூறாமை.

அண்டிதள்ளுகை, அண்டிமாங்கொட்டை, எகிர்க் கொழுப்பு, தொண்ணைத்தடி என்னும் கூட்டுச் சொற்கள் அகராதியிற் குறிக்கப்பட்டுள்ளன. ஆயின், அண்டி (Anus), அண்டிமா (முந்திரி), எகிர் (அரணை), தொண்ணை (பருமன்) என்னும் தனிச் சொற்கள் குறிக்கப்படவில்லை.

## 5. மிகைபடு சொற்கள். (Redundant words)

சில சொற்கள் மிகைபடு சொற்களாயினும், உலக வழக்கில் வழங்கத்தான் செய்கின்றன. அவற்றையும் அகராதியில் குறித்தல் தக்கதே. ஆயின், அவற்றுட் பல குறிக்கப்படவில்லை.

எ.டு: அரை ஞாண் கயிறு
அரை ஞாண் கொடி
ஆண் பிள்ளைப் பிள்ளை
பெண் பிள்ளைப் பிள்ளை

இவை, முறையே, அரணாக்கயிறு (அண்ணாக்கயிறு), அரணாக்கொடி, ஆம்பிளைப்பிள்ளை, பொம்பிளைப்பிள்ளை எனக் கொச்சைவடிவில் வழங்குகின்றன.

Digitized by Viruba


இவ் வடிவைக் குறித்தல் கூடாது. இவற்றின் திருந்திய வடிவைக் குறிக்கலாம். சாவல் (சேவல்), வேங்கு (வாங்கு) முதலிய கொச்சை வடிவுகளை வேண்டாது குறித்திருக்கும்போது, மிகைபடு சொற்களின் திருந்திய வடிவை ஏன் குறித்தல் கூடாது ?

## 6. விளக்க மேற்கோளில் வருஞ் சொல்லைக்குறியாமை

சில சொற்கள் விளக்கமேற்கோளில் வந்திருக்கின்றன. ஆயினும், அவற்றைக் கண்டுபிடித்து அகராதிச் சொல்வரிசையில் சேர்த்திலர்.

எ.டு: உடும்போடி - உடும்பு ஓடினதினால் ஆகாதென்று தள்ளிய நிலம்.
குறித்து வருகிளவி - புணர் மொழியில் வருமொழி.
சிறிய திருவடி - அனுமான்.

ஆமைதவழி என்னுஞ் சொல்லை விளக்கும் மேற்கோள் "உடும்போடி ஆமைதவழி புற்றும்" என்பது. நிறுத்த சொல் என்பதை விளக்க வந்த மேற்கோள் "நிறுத்த சொல்லே குறித்து வருகிளவி என்று" என்பது. பெரிய திருவடி என்பதை, சிறிய திருவடி யினின்று வேறுபடுத்தப்பட்டதென்று ஆங்கிலத்திற் குறித்துள்ளனர். இங்ஙனம், மேற்குறித்த மூச்சொல்லும் விளக்கமேற்கோளில் வந்திருப்பினும், அவற்றை அவற்றோடொத்த அல்லது அவற்றிற்கெதிரான சொற்களைப்போல், சொல்வரிசையிற் சேர்க்கவில்லை.

## 7. சொல்லின் கொச்சை வடிவைச் சொல்வரிசையிற் சேர்த்தல்.

### (1) கொச்சை வடிவுமட்டும்

சில சொற்களின் கொச்சை வடிவையே சொல் வரிசையிற்சேர்த்து, அவற்றின் திருந்திய வடிவை மூலக் குறிப்பில் மட்டும் பெரும்பாலும் அரைகுறையாய்க் காட்டிவிட்டிருக்கின்றனர்.

| | குறித்த சொல் | காட்டிய மூலம் |
|---|---|---|
| எ.டு: | அண்ணாக் கயிறு | அரைநாண் + |
| | அப்பப்போ | அவ்வப்போது |
| | அருணாக்கயிறு | அரைநாண் + |
| | ஆமக்கன் | ஆண்மகன் |
| | இப்பவும் | இப்போதும் |
| | கடிச்சவாய்தடிச்சான் | கடி + |
| | சோத்தாள் | சோறு + |

Digitized by Viruba


| | |
|---|---|
| பிடிச்சுராவி | பிடி + அராவு |
| பொட்டச்சி | பெட்டை |

இனி, அர்ணாள் என்னும் கொச்சை வடிவைக் குறித்து, அரை நாண் என்று மூலங்காட்டி, அர்ணாட்கொடி, அர்ணாட் கயிறு, என எடுத்துக்காட்டுத் தந்திருப்பது அகராதிக்கு மிகமிக இழுக்குத்தருவதாகும். (Vol I பக். 113).

## (2) கொச்சைவடிவும் திருந்திய வடிவும்

| திருந்திய வடிவு | கொச்சை வடிவு |
|---|---|
| அகப்பை | ஆப்பை |
| அஞ்சறைப்பெட்டி | அஞ்சலப்பெட்டி, அஞ்சாரப்பெட்டி |
| அடைய வளைந்தான் | அடைய வளைஞ்சான் |
| அப்பத்தாள் | அப்தாள் |
| அப்பளம் | அப்பளாம் |
| அப்போது | அப்பம், அப்போ |
| அரைநாண் | அருணாள் |
| இடைகழி | இரேழி, ரேழி |
| இரண்டு | ரெண்டு |
| இரா | ரா |
| கடைத்தேறு | கடத்தேறு |
| சாப்பிடு | சாப்படு |
| சேவல் | சாவல் |
| நிரம்ப | ரெம்ப, ரொம்ப |
| பட்டறை | பட்டரை |
| பெட்டை | பொட்டை |
| வாங்கு | வேங்கு |

இங்ஙனம், திருந்திய வடிவைப் போன்றே கொச்சை வடிவையும் அகராதியிற் சேர்த்துப் பொருள் கூறியிருப்பின், மாணவர் எங்ஙனம் திருந்தமுடியும்? திருத்தமாயெழுதும் மாணவரையும் கொச்சையாய் எழுதும்படியன்றோ இவ் வடிவுகள் தூண்டுகின்றன !

இனி, வரச்சூலை, வரட்சி, வரட்சுண்டி வரட்சூலை, வரட்சொறி, வரட்டடைப்பான் வரட்டி வரட்டுதல், வரட்டு, வரட்டுச்சோகை, வரட்டுப்பசு, வரள், வரள்வாயு என றகரம் வரவேண்டிய சொற்களையெல்லாம் ஒழுங்காய் ரகரம் வைத்தும் குறித்திருப்பது, எத்துணைக் குறும்புத்தனமும் தமிழைக் கெடுக்கும் சூழ்ச்சியும் ஆகும் !

Digitized by Viruba


(3) திருந்திய வடிவும் கொச்சை வடிவும் வேற்றுமொழி வடிவும்

| திருந்திய வடிவு | கொச்சை வடிவு | வேற்றுமொழி வடிவு |
| --- | --- | --- |
| உயர்த்தி | உசத்தி | ஒஸ்தி |
| சட்டுப்புட்டு | | ஜட்பட் |
| சல்லி | | ஜல்லி |
| சடைக்குச்சு | | ஜடகொச்சு |

## 8. சொல்லின் வழுவடிவைக் குறித்தல்.

| குறிக்கப்பட்ட வழுவடிவம் | குறிக்கப்படாத திருந்திய வடிவம் |
| --- | --- |
| அரிவாள் மணைப்பூண்டு | அரிவாள் முனைப்பூண்டு |
| ஆமவடை | ஆமைவடை |
| ஆள்வள்ளி | ஆழ்வள்ளி |
| கிழியஞ்சட்டி | கிழியஞ்சிட்டி |

| குறிக்கப்பட்ட வழுவடிவம். | குறிக்கப்படாத திருந்திய வடிவம் |
| --- | --- |
| நாசமற்றுப்போவான் | நாசமுற்றுப்போவான் |
| பாளையரிவாள் | பாளையறுவாள் |
| பொட்டைக்காடு | பொட்டற்காடு |
| பொது நிறம் | புது நிறம் |
| வீச்சரிவாள் | வீச்சறுவாள் |
| வெட்டரிவாள் | வெட்டறுவாள் |

அரிவாள் முனைப்பூண்டென்பது, மணையரிவாளின் முனையிலுள்ள தேங்காய் திருகிபோல், ஓரத்திற் பல்வடிவான முனையுள்ள வட்ட இலையுடைய பூண்டு. அரிவாள் மணையென்பது அரிவாளைப் பதித்திருக்குங்கட்டை. அதைப் போன்ற பூண்டென்பது பொருளற்றது.

ஆமைவடையென்பது, உழுந்துவடைபோல் தட்டையாயிராது ஆமை யோட்டைப்போல் வெளிவளைவாகவுள்ளது. ஆமைத்தாலி, ஆமைப்பூட்டு, ஆமைமடி, ஆமையாழ் முதலிய சொற்களையும் அவை குறிக்கும் பொருள்களின் வடிவையும் நோக்குக.

சட்டி என்பது பெரியது, சிட்டி சிறியது. அகலுக்குச் சிட்டியென்னும் பெயரே பொருந்தும். நெல்லை மாவட்டத்திலும் கிழியஞ்சிட்டியென்றே சொல்வர்.

அரிவாள் என்பது காய்கறிகளைச் சிறிதாய் அரியும் கத்தி அல்லது மணையலகு. அறுவாள் என்பது பெரிதாய் அறுக்கும் அல்லது வெட்டும் கத்தி

Digitized by Viruba


வகை. பன்னறுவாள், பாளையறுவாள், வீச்சறுவாள், வெட்டறுவாள் முதலிய வற்றை அறுவாள் என்று சொல்வதே வழக்கம். அரிவாள் என்று சொல்வார் ஒருவருமில்லை. கதிரறுப்பெல்லாம் அறுப்பு அறுவடையென்றே சொல்லப் படும். அரிதாள் என்னும் கூட்டுச் சொல்லில் மட்டும், அரி என்னும் சொல் வந்துளது. அது நெல், புல், தினை, வரகு, சாமை போன்ற சிறு பயிர்களின் தாளையே குறிப்பது. "நாக்கரியுந்தய முகனார்" என்று கம்பர் கூறியது செய்யுள் வழக்கு. அறுவாள் என்னும் சொல் தனித்தேனும் பிற சொல்லொடு சேர்ந்தேனும் அகராதியில் ஓரிடத்திலும் வராதிருப்பது, மிக வியப்பாயிருக் கின்றது.

கம்பர் செய்யுளொன்றில், யாழ், வாழ், பாழ் என்னுஞ் சொற்கட் கேற்ப, நாள் என்பது நாழ் என்று திரிந்துள்ளது. அது உலக வழக்கிற் கேற்காது. செய்யுளிலும் நாள் என்றிருப்பின் குற்றமன்று. நாழ் என்பது ஏட்டுப்பிழையாகவுமிருக்கலாம். ஆதலால், அவ்வடிவத்தை அகராதியிற் குறித்திருப்பது வழுவாம்.

## 9. குறிக்க வேண்டாத சொல்லைக் குறித்தல்.

கீழ்வருஞ் சொற்களையும் அவை போன்றவற்றையும் அகராதியிற் குறிக்கத் தேவையில்லை.

அணியிழை — பெண்.
அழாஅல் — அழுகை.
அத்தத்தாவெனல் — தந்தையை அப்பப்பா என்றழைத்தல்.
முக்குழிச்சட்டி — மூன்று குழியுள்ள பணியாரச்சட்டி.

அணியிழைஎன்பது ஓர் அன்மொழித்தொகை. இங்ஙனம் நூற்றுக் கணக்கானவை உள.

அழல் அல்லது அழால் என்பதன் அளபெடை வடிவே அழாஅல் என்பது.

ஒற்றைக்குழிச்சட்டி, நாற்குழிச்சட்டி, ஐங்குழிச்சட்டி, அறுகுழிச் சட்டி, எழ்குழிச்சட்டி எனப் பன்னிருகுழிச்சட்டி வரையிருப்பதால், முக் குழிச்சட்டியை விதந்து குறிக்கவேண்டியதில்லை.

## 10. தமிழுக்கு வேண்டாத வேற்றுச்சொல்லைக் குறித்தல்.

### (1) தன்னெழுத்துச் சொல்.

| சமற்கிருதம் | சேமியம் | ஆங்கிலம் |
|---|---|---|
| அச்சாவாகன் | இசுமு | அண்டிமாண்டு |
| அசப்பியம் | இத்தத்து | அவிடவெட்டு |

Digitized by Viruba



| | | |
|---|---|---|
| அசம்பிரேட்சிய காரித்துவம் | இத்தா | ஆக்கர் |
| அசமஞ்சசம் | இத்திகாத்து | ஆபீசு |
| அசமதாகம் | இத்திகாபு | இஞ்சின் |
| அசமந்திபம் | இத்திபார் | எட்டு |
| அசமருதம் | இத்திராசு | கேசு |
| அசமோதகம் | இத்திலா | கோர்ட்டு |
| அசனபன்னி | இதிபாரா | சீக்கு |
| அசிதாம்புருகம் | இந்துவி | துருப்பு |
| அசிபத்திரகம் | இப்பா | நம்பர், நபர் |
| அசுமாரோபணம் | இபாதத்து | பத்தாந்து |
| அசுவத்தம் | இபாரத்து | புலீன் |
| அசுவதட்டிரம் | இபுதார் | பேப்பர் |
| அசுவாரசியம் | இபுனு | போலீசு |

சேமியம் (Semitic) என்பது அரபி, எபிரேயம், உருது முதலிய இசலாமிய மொழித்தொகுதி.

## (2) வேற்றெழுத்துச் சொல்.

| சமற்கிருதம் | சேமியம் | ஆங்கிலம் |
|---|---|---|
| ஜ்ரும்பா | இஜ்ஜத்து | ஒட்ராப்பு |
| ஜகத்ஜ்யோதி | இஜாபா | டக்கு |
| ஜகதீச்வரன் | இஜார்நாமா | டயன் |
| ஜங்கமலிங்கம் | இஜாரா | டீ |
| ஜங்காரம் | இஜாஸத்து | டெலிபோன் |
| ஜஞ்ஜாமாருதம் | இஷா | டைகிளாட்டு |
| ஜபாகுஸுமம் | இஷாரா | டை |
| ஜம்புத்வீபம் | இஷூக்கு | பலஞ்ஜீப்மத்தான்காயீ |
| ஜயகோஷம் | இஷூராக்கு | பற்றக்சார் |
| ஜயவிஜயீபவ | இஸ்கால் | நோட்டேபாண்ட் |
| ஜர்ஜ்ஜரம் | இஸ்தவா | ரப்பு |
| ஜலத்வேஷரோகம் | இஸ்திக்பார் | ரயில்பாக் |
| ஜலஸ்தம்போதரம் | இஸ்திமிரார் | ராங்கி |
| ஜன்மஸ்வபாவம் | இஸ்தியார் | ரீப்பர் |
| ஜன்மோத்ஸவம் | இஸ்திலாக்கு | ரூலர் |
| ஜனரஞ்ஜகம் | இஸ்ஸா | ஜட்ஜி |
| ஜஹதஜஹல்லக்ஷணை | இஸூராபு | ஜோக்கு |

Digitized by Viruba



திரு. வையாபுரிப் பிள்ளை, வேலூர் மகிழ்நனர் ஒருமுறை பாடப் பொத்தகக்குழு வொப்பத்திற்கு விடுத்த ஐந்தாம் வகுப்புப் பொத்தகத்தில் இருந்த பைம்புல்வெளி என்னுஞ்சொல், சிறுவர் வாயில் நுழையாதென்று அப் பொத்தகத்தைத் தள்ளிவிட்டாராம். ஆயின், அவர், பெரியோர் வாயிலும் நுழையாத ரக்திஸ்ப்டவி சந்நிபாதசுரம், பரியது யோச்சியோ பேக்ஷணம், ஜஹத ஜஹல்லக்ஷணை, ஸ்படிகஜபாகுஸம்ம நியாயம் என்னுஞ் சொற்களை, எந்த வகையில் அகராதியிற் சேர்த்தாரோ தெரியவில்லை. இவற்றையெல்லாம் சமற்கிருத அகராதியி லன்றித் தமிழகராதியிற் குறித்தல் கூடாது.

## (3) ஈரெழுத்திலும் வேற்றுச்சொல் (சமற்கிருதம்)

| தன்னெழுத்துச்சொல் | வேற்றெழுத்துச்சொல் |
|---|---|
| அசகசாந்தரம் | அஜகஜாந்தரம் |
| அசாக்கிரதை | அஜாக்கிரதை |
| அசாகளத்தனம் | அஜாகளஸ்தனம் |
| அட்டகம் | அஷ்டகம் |
| அட்டதிக்கயம் | அஷ்டதிக்கஜம் |
| அட்டதிக்குப்பாலகர் | அஷ்டதிக்குப்பாலகர் |
| அட்டபந்தனம் | அஷ்டபந்தனம் |
| அட்டமச்சனி | அஷ்டமச்சனியன் |

## (4) பல்வடிவு வேற்றுச்சொல்.

இராக்கதன், இராட்சசன், ராட்சதன், ராக்ஷஸன்.
இருடி, ரிஷி, ருஷி.
இலக்குமி, இலட்சுமி, லட்சுமி, லக்ஷ்மி.
சட்டி, சஷ்டி, ஷஷ்டி.
சபாசு, சவ்வாசு, சவாசு சபாஷ், ஷபாஷ், ஸபாஷ்.
சிகுவை, ஜிஹ்வா, ஜிஹ்வை.
பாசை, பாடை, பாஷை.
ராக்கடி, ராக்கிடி, ராக்குடி, ராக்கொடி, ராக்கோடி.
ரூப்பு ரூப்பு, ரூப்ரூ, ரூப்ரூப்.
ஜிராயத்து, ஜிராயதி, ஜிராயித்.

இங்ஙனம், பல வேற்றுச்சொற்கள் பலவடிவிற் குறிக்கப்பட்டுள்ளன.

தமிழ் மிகுந்த சொல்வளமுள்ள மொழியாதலால், அதற்கு மேற்காட்டிய சொற்கள் தேவையேயில்லை. தேவையில்லாது பிறமொழிச்சொற்களைக் கடன் கொள்வதால், தமிழ் தன் தூய்மையும் சிறப்போசையும் இழந்து கலவைமொழியாவதுடன், நாளடைவில் திரவிட மொழிகள்போல் ஆரிய வண்ணமாய் மாறி

Digitized by Viruba


விடும். வேற்றுச்சொற்கள் வழங்கும்போது, தன் சொற்கள் வழக்கற்றுப் பொருளிழப்பதுடன், நாளடைவில் மறைந்துபோய் மீளாநிலை யடைகின்றன.

கீழ்வரும் வேற்றுச்சொற்கள் போன்றவை தமிழுக்கு முற்றும் வேண்டாதவை.

| சமற்கிருதம் | தென்சொல் | சேமியம் | தென்சொல் |
|---|---|---|---|
| இருதயம் | — நெஞ்சாங்குலை, நெஞ்சம் | கிராக்கி | — அருந்தல் |
| சனி(க்கிழமை) | — காரி | சவால் | — அறைகூவல் |
| சிகிச்சை | — பண்டுவம் | சிபார்சு | — தகவுரை, பரிந்துரை |
| தந்தம் | — மருப்பு | பர்வா(யில்லை) | — தாவில்லை, தாவிலை |
| தருமம் | — அறம் | பாக்கி | — நிலுவை |
| திருப்தி | — பொந்திகை | ராசி | — ஒப்புரவு |
| பிராணி | — உயிர்மெய் | லாகா | — திணைக்களம் |
| சுத்தம் | — துப்புரவு | வசூல் | — தண்டல் |
| மேகம் | — முகில் | வார்சு | — பிறங்கடை |
| மைத்துனன் | — அளியன் | ஸாமான் | — பண்டம், உருப்படி |
| நித்தியம் | — நித்தல் | ஷோக்கு | — பகட்டு, தளுக்கு |

தமிழுக்கு இன்றியமையாத வேற்றுச்சொல்லாயின், தமிழில் மொழி பெயர்த்தே வழங்குதல் வேண்டும். இம்முறையைக் கடைப்பிடித்தே, கரும்பு, மிளகாய், உருளை(க்கிழங்கு), புகையிலை, வான்கோழி, மிதிவண்டி, வைத்தூற்றி முதலிய சொற்களைப் பொது மக்கள் புனைந்திருக்கின்றனர்.

மொழி பெயர்க்க முடியாத சிறப்புப்பெயராயின், தமிழில் எழுத்துப் பெயர்த்தே வழங்குதல் வேண்டும்.

> "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
> எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே."
> "சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்"

என்று தொல்காப்பியர் அக்காலத்திற்கேற்பச் சுருக்கிக் கூறினர் (884, 885).

நன்னூலாசிரியரான பவணந்தியாரோ, எவ்வெவ் வடவெழுத்தை எவ்வெவ்விடத்தில் எவ்வெத் தமிழெழுத்தாய்த் திரித்தல் வேண்டுமென்பதைப் பற்றி,

Digitized by Viruba


"ஏழாமுயிர் இய்யும் இருவும்ஐ வருக்கத்
திடையின் மூன்றும் அவ்வம் முதலும்
எட்டே யவ்வும் முப்பது சயவும்
மேலொன்று சடவும் இரண்டு சதவும்
மூன்றே அகவும் ஐந்திரு கவ்வும்
ஆவீ றையும் ஈயீ றிகரமும்"
"ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்
லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்
கிய்யும் மொழிமுத லாகிமுன் வருமே."
"இணைந்தியல் காலை யரலக் கிகரமும்
மவ்வக் குகரமும் நகரக் ககரமும்
மிசைவரும் ரவ்வழி உவ்வு மாம்பிற."

என்று விளக்கமாகக் கூறியுள்ளார் (147, 148, 149). இந்நூற்பாக்கள் (சூத்திரங்கள்) வடவெழுத்துக்களை மாற்றும் முறையைச் சொன்னவையே யன்றி, வடசொற்களைக் கடன் கொள்ளுமாறு தூண்டியவையல்ல.

தமிழில் எல்லாவெழுத்துக்களும், பிறமொழிகளிற்போல், சொல்லின் மூவிடத்தும் வருவனவல்ல. முதனிலையெழுத்துக்களும் இடைநிலையெழுத்துக்களும் இறுதிநிலையெழுத்துக்களும், இன்னின்னவென்று இலக்கணத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன. இவ்வரம்புமீறி நூற்றுக்கணக்கான அயற் சொற்கள் அகராதியிற் குறிக்கப்பட்டுள்ளன. ரகர உயிர்மெய்களுள் 'ரை' தவிர மற்றப் பதினொன்றும், லகர உயிர்மெய்களுள் 'லை' தவிர மற்றப் பதினொன்றும், டகரவுயிர்மெய்களுள் 'டு' தவிர மற்றப் பதினொன்றும, மொழி முதலெழுத்துக் களாகக் காட்டப்பட்டுள்ளன. இது தமிழிலக்கணத்தை அடியோடு ஒழித்த லன்றி வேறெதனை நோக்கமாகக் கொண்டிருத்தல் கூடும்?

| எ. டு: | முதனிலை | இடைநிலை | இறுதிநிலை |
|---|---|---|---|
| | டம்ளர் | காப்தாரி | சகி |
| | த்ரப்ஸம் | பால்யன் | ரப் |
| | ரஹ்மத் | ரக்தம் | ரயத் |
| | லோரகம் | ரத்னம் | ஜெட் |
| | ஸ்தலம் | ஜிஹ்வா | ஷபாஷ் |

முகமதிய மன்னராட்சியில் உருதுச் சொற்கள் தமிழ் நாட்டில் வழங்கின வெனின், அவற்றைத் தனியாகத் தொகுத்து வெளியிடவேண்டுமேயன்றி, தமிழ்ச் சொற்களொடு கலத்தல் கூடாது. சென்னை யகராதியில் அவற்றை யெல்லாம் சேர்த்தது, வேண்டுமென்று தமிழின் தூய்மையைக் குலைத்தற்கே யன்றி வேறன்று. ஆகவே, அதற்குத் தென்னிந்திய அகராதி (South Indian Lexicon) என்னும் பெயரே பொருத்தமாம்.

Digitized by Viruba


## 11. இனச்சொல் இன்மை

பல தமிழ்ச் சொற்கட்குத் திரவிடமொழியினச் சொற்கள் அகராதியிற் குறிக்கப்படவில்லை.

| ஈ. டு: | தமிழ்ச்சொல் | குறிக்கப்படாத் தெலுங்கினச்சொல் |
|---|---|---|
| | அது | அதி |
| | அவன் | வாடு, வாண்டு |
| | உள் | லோ |
| | எழு | லெய் |
| | எழுபது | டெப்பது |
| | ஏன் | ஏலா |
| | ஒன்பது | தொம்மிதி |
| | நம்பு | நம்மு |
| | மீது | மீத |
| | வடை | வட |

## 12. திசைச்சொல் இன்மை

| எ. டு: | சொல் | பொருள் | இடம் | |
|---|---|---|---|---|
| | ஓடக்கான் | ஓணான் | கோவை | |
| | பெருக்கான் | பெருச்சாளி | ,, | |
| | கூடப்போதல் | தொலைந்துபோதல் | ,, | (கோபி) |
| | எங்கைக்கு | எவ்விடத்திற்கு | வடார்க்காடு | |
| | எந்தண்டை | எப்பக்கம் | ,, | |
| | தூர்தல் | புகுதல் | ,, | |

## 13. எழுத்துக்கூட்டல் வழு

சில சொற்கள் தவறாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ளன.

எ. டு. குழிசீலை, மாரூப்பு.

இவை, முறையே, குளிசீலை, மாராப்பு என்றிருத்தல் வேண்டும்.

Tumbler (குடிநீர்க்குவளை) என்னும் ஆங்கிலச்சொல், டம்ளர், தமிளர், தமிழர் என்னும் மூவடிவிற் குறிக்கப்பட்டுள்ளது. தமிழர் (தமிழ் மக்கள்) என்னும் இனப்பெயரான தமிழ்ச்சொல்லையே பொதுவாகத் தமிளர் என்று மக்கள் தவறாய்ப் பலுக்கும்போது, தமிளர் (குவளை) என்னும் கலப் பெயரான ஆங்கிலச் சொல்லையா தமிழர் என்று சிறப்புழகரங் கொடுத்துத் தவறின்றிப் பலுக்குவர்! இது எத்துணைக் குறும்புத்தனமான குறிப்பு!

Digitized by Viruba


### 14. ஆங்கிலத்தில் எழுத்துப்பெயர்ப்பு முறைத்தவறு

தமிழ் வல்லினமெய்கள், தமிழிலுள்ள பிறமெய்களை நோக்க, வல்லினமேயன்றி, வடமொழி வல்லினம் போல அத்துணை வல்லோசையுடையனவல்ல. தமிழில் இருககரம் சேர்ந்தால்தான் வடமொழியில் அல்லது ஆங்கிலத்தில் ஒரு ககரத்திற்குச் சமமாகும்.

எ. டு: தேக்கு – Teak.

தமிழ் வல்லினம் மெல்லினத்திற்கு முன்வரின், எடுப்பொலி பெறும். இதை நோக்காது, வடமொழி வல்லினவொலிவகை நான்கனுள் முதல்வகையென்றே கருதிக்கொண்டு, தமிழ் வல்லின மெய்களை ஆங்கிலத்தில் எழுத்துப்பெயர்த்திருப்பது, தமிழுக்கு மாறானதும் அயல் நாட்டார்க்குத் தவறான வழிகாட்டுவதுமாகும்.

| எ. டு: தமிழ்ச்சொல் | ஆங்கிலத்தில் எழுத்துப் பெயர்க்கப்பட்டுள்ள முறை | இருக்கவேண்டிய முறை |
|---|---|---|
| அங்கு | anku | angu |
| அஞ்சு | anchu | anju |
| அண்டு | antu | andu |
| அந்து | anthu | andu |
| அம்பு | ampu | ambu |

ங்க்க, ஞ்ச்ச, ண்ட்ட, ந்த்த, ம்ப்ப, என்னும் வன்கூட்டொலிகள் தெலுங்கிலன்றித் தமிழிலில்லை.

## II. பொருள் வழுக்கள்

சென்னைப் ப. க. க. த. அகராதியின் இரண்டாம் பெருங்குறை, சொல்லிற்குத் தரப்பட்டிற்கும் பொருளின் வழுவாம்.

### 1. இயல்விளக்கம் அல்லது சொற்பொருள் தமிழிற் கூறப் பெறாமை.

அகச்சுட்டு என்னும் சொல்லிற்கு, ஆங்கில விளக்கத்திலுள்ள எடுத்துக் காட்டுக்களைத்தவிர, தமிழில் விளக்கமாவது பொருளாவது கூறப்படவில்லை. ஆகவே, ஆங்கிலம் அறியாதார்க்கு இத்தகைய விளக்கம் பயனற்றதாம். அசாக்கிரதை யென்னும் சொற்கு முற்றிலும் ஆங்கிலத்திலேயே பொருள் கூறப்பட்டுளது. அஞ்சுருவாணி யென்னும் சொற்கு ஆங்கிலத்தில் விளக்கங் கூறி, தமிழில் அச்சாணி என்ற சொல் மட்டுங் குறிக்கப்பட்டுளது.

Digitized by Viruba


## 2. குன்றக்கூறல்

| எ. டு: சொல் | குன்றக்கூறல் | நிறைவான பொருள் |
| --- | --- | --- |
| எத்தாப்பு | வஸ்திரம் | மார்பின் குறுக்காக அணியும் மேலாடை. |
| எருகுதல் | மாடுகழிதல் | இருதிணையுயிரிகளும் திண்ணிய குழம்பாகக் கழிதல். |
| கரிக்கோடிடுதல் | மோவாயில் மயிர் அரும்புதல் | மீசை முளைக்கத் தொடங்குதல். |
| காக்காய்ப்பிசின் | கருவேலம்பிசின் | கருவேல மரத்தினின்று வடியும் மக்குப்போன்ற கரிய போலிப்பிசின். |
| குக்கல் | நாய் | குள்ளநாய். |
| குண்டுக்கழுதை | ஆண்கழுதை | இள ஆண்கழுதை. |
| குத்துப்பழி | பெருஞ்சண்டை | கத்திக்குத்து நேருஞ்சண்டை. |
| குளுகுளுத்தல் | அழுகிப்போதல் | மிகக்கனிந்து குழைதல். |
| தொழுப்புக்குடல் | ஆட்டின் சிறுகுடல் | ஆட்டின் சிலுப்பிக்குடல். |
| துரிஞ்சில் | வாவல் | சிறு வௌவால். |
| பன்றிவார் | பன்றியின் மாமிசம் | பன்றியின் தோல். |
| மண்ணுக்குப் போடுதல் | கடுஞ்சிறையிலிடுதல் | அந்தமான் தீவிற்கனுப்புதல். |
| வடை | உழுந்தாற் செய்யப்படும் ஒருவகைப் பண்ணிகாரம் | உழுந்து, கடலைப்பருப்பு முதலியவற்றாற் செய்யும் ஒரு வகைப் பலகாரம். |

## 3. மிகைபடக் கூறல்

கரித்தல் என்னும் சொல்லிற்கு, "To be saltish to the taste; உப்புச்சுவை மிகுதல். இந்தக்கறி உப்புக்கரிக்கிறது." என்று பொருளும் எடுத்துக்காட்டும் தரப்பட்டுள்ளன.

கரித்தல் என்னும் வினைச்சொல்லிற்கு, மிகுதல் என்பதுதான் பொருளேயன்றி உப்புக்கரித்தல் என்பதன்று. உப்புக்கரித்தல் என்பதே பொருளாயின், எடுத்துக்காட்டு, 'இந்தக்கறி கரிக்கின்றது' என்றன்றோ இருத்தல் வேண்டும். அங்ஙனமிருப்பின் பொருள் வேறுபட்டுவிடும். உப்பு என்னும் சொல்லொடு கூடிநின்றலன்றி, கரித்தல் என்னும் சொல்லிற்கு உப்புச்சுவைப் பொருள்தரும் ஆற்றலில்லை. உப்புக்கரித்தல் என்னும் மரபுவினை, தனியாகவும் அகராதியில் அதற்குரிய இடத்திற் குறிக்கப்பட்டு, உவர்ப்பு மிகுதல் என்னும் பொருள் கூறப்பட்டிருத்தல் காண்க.

Digitized by Viruba


## 4. வழுப்படக்கூறல்.

அளைமறிபாப்பு என்னும் சொற்கு,

"A mode of construing in which the expression at the end of a verse is conjoined with a word in the middle of a verse, or with one in the beginning of another verse, one of eight porulkol; பாட்டின் ஈற்றினின்ற சொல் இடையிலும் முதலிலுஞ் சென்று பொருள் கொள்ளப்படு முறை."

என்று விளக்கங் கூறப்பட்டுள்ளது. இது தாப்பிசைப் பொருள்கோளுக்கு அல்லது விளக்கணிக்கு ஒருவாறு பொருந்துமேயன்றி, அளைமறிபாப்புப் பொருள்கோளுக்குப் பொருந்தவே பொருந்தாது.

அளைமறிபாப்புப் பொருள் கோளாவது, தலை முன்னும் வால் பின்னுமாக வளைக்குட் புகுந்த பாம்பு, அங்ஙனமே திரும்பாது திரும்பவும் தலை முன்னாக வளைந்து மாறிக் கொள்வதுபோல், ஒரு செய்யுள் தலைகீழாய் அடியடியாக வெடுத்துப் பொருள் கொள்ளப்படுவது.

"சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியிற் சுழல்வார்தாமும்
மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்றே முனிவார்தாமும்
தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து தண்டேன்றித் தளர்வார்தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலாதாரே."

இச்செய்யுளில், 4-ஆம் அடி முதலடியாகவும், 3-ஆம் அடி 2-ஆம் அடியாகவும், 2-ஆம் அடி 3-ஆம் அடியாகவும், முதலடி 4-ஆம் அடியாகவும், மாறியமைந்து பொருள்படுதல் காண்க.

ஈர்ங்கை என்னும் சொல்லிற்கு,

"Wet hand, fig. hand that has been washed after taking one's meal; உண்டு பூசியகை. ஈர்ங்கை விதிரார் கயவர் (குறள், 1077)."

என்று விளக்கங் கூறப்பட்டுள்ளது. ஈர்ங்கை யென்பது எச்சிற்கையே யன்றி உண்டு பூசிய கையன்று. எச்சிற்கையிற் காக்கை விரட்டாதவன் என்னும் வழக்கையும் நோக்குக.

கசகர்ணம் என்னும் சொற்கு,

"1. Lit., elephants' ear, term used to denote the art of moving or waving one's ears in imitation of the elephant; காதாட்டும் வித்தை. 2. A task involving stupendous effort; பெருமுயற்சியால் ஆக வேண்டிய காரியம்,"

Digitized by Viruba


என்றும், அதனை அடுத்துள்ள கசகர்ணம் போடுதல் என்னும் மரபு வினைக்கு,

" > id. +. To put forth unusual or extraordinary effort to realize an object; பெருமுயற்சி செய்தல். அவன் அந்த வேலையைப் பெறக் கசகர்ணம் போட்டான்." என்றும் விளக்கங் கூறப்பட்டுள்ளது.

இதில், கர்ணம் என்பது கரணம் (somersault); காதன்று. கசகர்ணம் போடுதலாவது, யானை கரணம் போட்டாற்போல் அரும்பெருமுயற்சி செய்தல். போடுதல் என்னும் வினை கரணத்திற்கன்றிக் காதிற்குப் பொருந்தாமை நோக்குக. யானை காதாட்டுவதுபோல் ஒருவன் காதாட்டி என்ன கருமத்தை நிறைவேற்ற முடியும்? இது எத்துணை நகைப்பிற்கிடமான செய்தி!

பொருள் வழுக்கள் அகராதி முழுவதும் ஆங்காங்கு பலவுள.

| எ. டு: சொல் | வழுப்பொருள் | சரியான பொருள் |
|---|---|---|
| கண்ட சித்தி | ஆசுகவிசொல்லும் வல்லமை | புறக்கண்ணாற்காணாததை அகக்கண்ணாற்கண்டு (clairvoyance) கடுத்துப்பாடுதல். |
| கற்பயறு | A kind of greengram | பாசிப்பயற்றினின்றும் வேறான தனிப்பயற்று வகை. |
| குறவை | வரால் | வராலினும் வேறானமீன். |
| கெத்துதல் | கோழி முதலியன கொக்கரித்தல் | முட்டையிட்ட கோழி அடைகாக்கக் கத்துதல். |
| கேருதல் | ,, | கோழி முட்டையிடக் கத்துதல். |
| கொம்மை | பதர் | சிறு கூலங்களின் உமி. |
| சுவரொட்டி | Liver | மண்ணீரல் (Spleen). |
| செந்தூரிப் போதல் | மட்பாண்டத்தின் ஓட்டையை அரக்கால் அடைத்தல் | மட்பாண்டத்தின் அடியில் சிறு ஓட்டை விழுதல். |
| பொத்தி | வரால் | குறவை. |
| மடற்பனை (நன். 33) | ஆண்பனை | பெண்பனை. |
| மாங்காய் | மூத்திராசயம் | நெஞ்சாங்குலை. |
| வள்ளி(புறம். 63) | வளையல் | கொடி, தண்டு. |

வள்ளி என்பது கொடி; வளைந்தது என்னும் பொருளது. ஒப்புநோக்க: கொடு—கொடி. கொடுமை=வளைவு. "ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்"

Digitized by Viruba


என்னும் புறப்பாட்டடிக்கு, "ஆம்பற்றண்டாற் செய்த வளையணிந்த கையினை யுடைய மகளிர்" என்று பழையவுரையாசிரியர் உரைத்திருத்தல் காண்க. தொடி என்பதே வளையல். இதைக் கவனியாத சென்னை யகராதித் தொகுப்பாளர், வள்ளியென்னுஞ் சொற்கு வளையல் என்று பொருள் குறித்துள்ளனர்.

வரால் என்னும் சொற்கு, கெண்டை யென்றும் பொருள் கூறப்பட்டுள்ளது. வரால் மீன் வேறு; கெண்டை மீன் வேறு.

இனி, வரால் 3 அடியும் 4 அடியும் வளரும் என்று கூறியிருப்பது, வியப்பையும் நகைப்பையும் விளைக்கின்றது.

"தானே தரக்கொளி னன்றித் தன்பால்
மேவிக் கொளக்கொடா விடத்தது மடற்பனை."—(நன். 33)

என்று, மாணவர் விரும்பும்போது ஒன்றைச் சொல்லாமல் தாமாக விரும்பும் போது அதைச் சொல்லும் ஆசிரியர்க்கு, தானாகக் காற்றடித்து விழுந்தாலன்றி ஒருவன் விரும்பும்போது ஏறிப் பழம் பறித்துக்கொள்ளமுடியாத கருக்கு மட்டையறுக்காத பெண்பனையைத் தெளிவாக உவமை கூறியிருக்கவும், அதை ஆண்பனையென்று நூற்பாவையுங் காட்டிக்குறிப்பது எத்துணைப் பொறுப்பற்ற செயலாகும்!

## 5. சில பொருள் கூறப்படாமை

பல சொற்கட்கு உரிய பொருள்களுள் ஒன்றும் பலவும் கூறப்படவில்லை. இக் குற்றத்தை அகராதி நெடுகலும் பார்க்கலாம்.

| சொல் | | குறிக்கப்படாத பொருள் |
|---|---|---|
| அச்சி | | அக்கை. |
| அடைதல் (செ. குன்ரு. வி.) | | களிமண் சாணம் முதலியவற்றை மொத்தமாகச் சேர்த்துவைத்தல். |
| ஆதல் | | பயன்படுதல். இந்த மரம் கலப்பைக்காகும். |
| உடக்கு | (1) | தோலுடன் கூடிய எலும்புக்கூடு. |
| | (2) | செயற்கையுடல். குதிரையுடக்கு (பொய்க்குதிரை). |
| எங்கே | (1) | போல. இவன் இவனுடைய அப்பனெங்கே யென்றிருக்கிறான். |
| | (2) | இருவரிடை யிருந்த வேறுபாடுண்மையை உணர்த்தும் குறிப்பு. |

Digitized by Viruba



| | | |
|---|---|---|
| | | அவன் எங்கே? இவன் எங்கே? |
| | (3) | பிறர் பொருளைக் கவரும் இடம் தேடுதற்குறிப்பு. எங்கே யென்று அலைகிறான். |
| ஒடியல் | | வறுத்து அவிக்கும் முறை. |
| ஏற்றியிறக்குதல் | (1) | உயர்த்தித் தாழ்த்துதல். |
| | (2) | புகழ்ந்து பழித்தல். |
| கட்டியடித்தல் | | உழுத நிலத்தில் மண் கட்டிகளை உடைத்தல். |
| கண்டகம் | | ஒரு முகத்தலளவை. |
| கண் வலிப்பூ | | காந்தட்பூ. |
| கல்லுப் பொறுக்கி | | கண்ணில் விழுந்துள்ள கல் மண்ணை விளக்கெண்ணெய் தடவியெடுக்கும் பெண். |
| கவணை | | மிருதங்கத்தின் இடக்கண். |
| சக்களத்தி | | பயிர் பச்சையுடன் கூட விளையும் சிறப்புக்களை. |
| சாணை | | போரடிக்குங் களத்தில் அரிக்கட்டுக்களை அல்லது கதிர்களைச் சேர்த்து வைக்கும் சூடு. |
| சுவரொட்டி | (1) | சுவரில் ஒட்டும் விளம்பரத்தாள். |
| | (2) | எறிந்தால் சுவரில் ஒட்டிக்கொள்ளக்கூடிய ஒரு வகைப் புழு. |
| செள்(ளு) | | பேன் குஞ்சு. |
| சை | | செல்வம். |
| தலையாரி | | ஒருவகைப் பம்பர விளையாட்டு. |
| தொண்டலம் | | கமலையேற்றச்சாலின் தோல்வால். |
| பனுக்குதல் | | விரல்களை மடக்கி மிருதங்கத்தின் இடப் பக்கத்தில் நுண்திறமாய் இயக்குதல். |
| பெட்டி போடுதல் | | சலவை செய்த துணிகளை இரும்பு அல்லது வெண்கலப் பெட்டியால் தேய்த்தல். |
| மலம்பிஞ்சு | | ஒரு மருந்துச்செடி. |
| வணர் | | யாழ்க்கோட்டின் (வீணைத் தண்டியின்) வளைந்த கடை. |

## 6. பொருள் வரிசையின்மை.

சொற்களின் பொருள் வரிசை, (1) சொற்பிறப்பியல் முறை (Etymological order), (2) வரலாற்று முறை அல்லது காலமுறை, (Historical or Chronological order), (2) ஏரண முறை (Logical order) என மூவகைப்படும். பண்டையிலக்கியம் அழியாத (சமற்கிருதம் போன்ற) மொழிகட்கும், (இந்தி போன்ற) புதிய மொழிகட்கும் தான், சொற்பிறப்பியல் முறையையும் வரலாற்று முறையையும் கையாள முடியும். தொன்முது பழங்

Digitized by Viruba


காலத்தில் தோன்றியதும் பண்டையிலக்கியம் முற்றும் அழிந்து போனதுமான தமிழுக்கோ, எரண முறையைத்தான் கையாள முடியும்.

களித்தல் என்னும் சொல்லிற்குரிய நாற்பொருள்கள் சென்னையகராதியிற் கீழ்வரும் வரிசையிற் குறிக்கப்பட்டுள்ளன.

(1) மகிழ்வடைதல்.
(2) கள்ளைப் பருகி வெறி கொள்ளுதல்.
(3) மதமுடையதாதல்.
(4) செருக்குறுதல்.

களி என்னும் வினை, கள் என்னும் பெயரினின்று தோன்றிக் கட்குடித்தலையே முதற்கண் உணர்த்துவதால், மேற் காட்டப்பட்டுள்ள நாற்பொருளும் பின்வருமாறு மாறியமைதல் வேண்டும்.

(1) கள்ளைப் பருகி வெறி கொள்ளுதல்.
(2) மதமுடையதாதல்.
(3) மகிழ்வடைதல்.
(4) செருக்குறுதல்.

ஆக்கசுப்போர்டுச் சிற்றகராதியிலும் (The Concise Oxford Dictionary) Intoxicate என்னும் சொல்லுக்கு இம்முறையிலேயே பொருள் கூறப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

## 7. வடமொழியிற் பொருள் கூறல்.

எ. டு: "ஆமென்............Verily, so be it, used by Christians usu. at the close of prayer or hymn; ததாஸ்து."

இதில், தமிழ்ச் சொல்லேயில்லை. 'ததாஸ்து' என்னும் வடசொற்குப் பதிலாக, அஃதாக, அங்ஙனமே, அவ்வாறாகுக, அப்படியே ஆகக்கடவது, என்பவற்றுள் ஒன்று இருக்கலாமே! சென்னை யகராதி தமிழருக்கேற்பட்டதா? வடமொழியாளர்க் கேற்பட்டதா? பொது மக்கள் இதைக்கவனிக்க.

## 8. ஒரு பொருட் பல சொற்களின் வேறுபாடு காட்டாமை

ஒவ்வொரு செம்மொழியிலும் ஒரு பொருட் பல சொற்கள் நிரம்பவுள. அவை பருப்பொருளில் ஒன்றுபட்டிருப்பினும் நுண்பொருளில் வேறுபட்டவை. சொல் வளத்திற் சிறந்த தமிழ் ஒரு பொருட் பல சொற்களிலும் சிறந்துள்ளது. ஆயின், அவற்றின் நுண்பொருள் வேறுபாட்டைச் சென்னை யகராதி

Digitized by Viruba


பொதுவாய் எடுத்துக்காட்டுவதில்லை. சொல்லுதலைப்பற்றிப் பல சொற்கள் தமிழில் உள. அவற்றுட் பலவற்றின் சிறப்புப்பொருளை அகராதி எடுத்துக் கூறவில்லை.

| எ. டு: சொல் | நுண்பொருள் |
|---|---|
| அறைதல் | ஓங்கிப்பேசுதல், வன்மையாகச் சொல்லுதல். |
| இயம்புதல் | இனிமையாகச் சொல்லுதல், இசைக் கருவியியக்கிச் சொல்லுதல். |
| இசைத்தல் | கோவையாகச் சொல்லுதல். |
| உரைத்தல் | நூலுக்கு உரைகூறுதல், விளக்கிச் சொல்லுதல். |
| கூறுதல் | பாகுபடுத்திச் சொல்லுதல். |
| சாற்றுதல் | பலரறிய நல்லுரை கூறுதல். |
| நவிலுதல் | நாவினால் ஒலித்துப் பயிலுதல். |
| நுதலுதல் | சொல்லித் தொடங்குதல். |
| நுவலுதல் | நூலுரைத்தல், நுண்பொருள் கூறுதல். |
| பகர்தல் | பண்டங்களின் விலை கூறுதல். |
| பறைதல் | உரத்துச் சொல்லுதல். |
| பன்னுதல் | பணிக்காய் (விவரமாய்)ச் சொல்லுதல். |
| புகலுதல் | விரும்பிச் சொல்லுதல். |
| புலம்புதல் | தனிமையிற் சொல்லுதல். |
| பேசுதல் | ஒரு மொழியிற் சொல்லுதல். |
| மாறுதல் | திருப்பிச் சொல்லுதல், மறுமொழி கூறுதல். |
| மொழிதல் | சொற்களை நன்றாய்ப் பலுக்கிச் சொல்லுதல். |

ஆய், யாய், ஞாய், தாய் என்னும் நான்கும் அன்னையைக் குறிக்கும் சொற்கள். இவை இடம்பற்றி வேறுபட்டவையாயினும், அகராதி சிறிதும் வேறுபடுத்திக்காட்டவில்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| ஆய் | – | (பொது) | | |
| யாய் | – | (எம் + ஆய்) | எம் அன்னை | (தன்மைத்தொடர்பு) |
| ஞாய் | – | (நும் + ஆய்) | நும் ,, | (முன்னிலைத் ,, ) |
| தாய் | – | (தம் + ஆய்) | தம் ,, | (படர்க்கைத் ,, ) |

"யாயும் ஞாயும் யாரா கியரோ" என்னும் குறுந்தொகைச் செய்யுட்கு (40), பண்டாரகர் (Dr.) உ. வே. சாமிநாதையர் உரைத்துள்ள உரையைக் காண்க.

Digitized by Viruba


## 9. எதிர்ச் சொற்களின் வேறுபாடு காட்டாமை

எ. டு:

| | | |
|---|---|---|
| ஆணிடி (தாக்குவது) | × | பெண்ணிடி (தாக்காதது) |
| இடுமுள்வேலி (பட்டுப்போனது) | × | முள்வாழ்வேலி (வளர்வது) |
| ஒட்டிப்பாடுதல் (சொல்லொற்றிப் பாடுதல், சார்ந்து பாடுதல்) | × | வெட்டிப்பாடுதல் (சொல்லொற்றாது பாடுதல், மாறாய்ப்பாடுதல்) |
| ஒட்டிப்பேசுதல் (சார்பாய்ப் பேசுதல்) | × | வெட்டிப்பேசுதல் (மாறாய்ப் பேசுதல்) |
| கருங்களமர் (உழுதுண்பார்) | × | வெண்களமர் (உழுவித்துண்பார்) |
| காரொக்கல் (வறியசுற்றம்) | × | வெள்ளொக்கல் (செல்வச்சுற்றம்) |
| கொட்டுக்கலியாணம் (மேளத்துடன் கூடியது) | × | கட்டுத்தாலி (மேளமில்லாதது) |

தென்னைமரத்தடியில் ஒருவரே இளநீர் குடிப்பின் சொத்தையாவது ஒல்லித்தேங்காய் என்றும், கோட்டான் உட்கார்ந்து சொத்தையாவது அல்லித் தேங்காய் என்றும், தஞ்சை மாவட்டத்திற் கூறுகின்றனர்.

அல்லித் தேங்காய், ஆணிடி, பெண்ணிடி, இடுமுள்வேலி, முள்வாழ்வேலி, ஒட்டிப்பாடு, ஒட்டிப்பேசு, கருங்களமர், காரொக்கல், கொட்டுக்கலியாணம் என்னும் சொற்கள் அகராதியில் இல்லை.

## 10. எடுத்துக்காட்டின்மை

வந்து என்னுஞ்சொல் அசைச்சொல் என்பதற்கு எடுத்துக்காட்டொன்றுங் குறிக்கப்படவில்லை.

நேரசை, நிரையசை, நேர்பசை, நிரைபசை என்னும் நால்வகை அசைகளுள், நிரையசை ஒன்றிற்கே, அதுவும் ஆங்கிலத்தில் மட்டும், எடுத்துக் காட்டுத்தரப்பட்டுளது.

## 11. கூறியது கூறல்.

(1) களைக்கொத்து என்னும்சொல் ககரத்திற்குரிய 2-ஆம் மடலத்தில் 817-ஆம் பக்கத்திலும், பின்னிணைப்பில் (அனுபந்தத்தில்) 207-ஆம் பக்கத்திலும், பொருள்காட்டவும் குறிக்கவும் பட்டுக் கூறியது கூறலாகவுள்ளது.

(2) “அச்சதந்தெளித்தல்......To sprinkle a mixture of rice and Cynodon grass, as on a newly married couple; அறுகும் அரிசியும் இடல்.........” (Vol. I. p. 24).

Digitized by Viruba



"அச்சுதந் தெளித்தல்........To sprinkle a mixture of rice and Cyrodon grass, as on a newly married couple ; அறுகும் அரிசியும் இடுதல்........." (Vol. I. p. 25).

இவற்றுள், அச்சுதந் தெளித்தல் என்னும் சொல்லுக்கு 'see அச்சதந் தெளித்தல் என மாட்டெறிந்தாற் போதும். மீண்டும் முன்போல் விளக்கங் கூறவேண்டியதில்லை.

அசாகளத்தனம், அஜாகளஸ்தனம் என்னும் சொற்கட்கும், இங்ஙனமே தனித்தனி முழு விளக்கங் கூறப்பட்டுளது.

## III. வேர் வழுக்கள்

சென்னைப் ப. க. க. த. அகராதியின் முப்பெருங்குறைகளுள், மூன்றாவதும் தமிழைக் கெடுப்பதில் முதற்றரமானதும், மூலவழுவாம்.

### 1. தென்சொல்லை வடசொல்லெனல்

பொதுவாக, வடமொழியைப்பற்றி இறப்புவுயர்ந்த எண்ணமும், தமிழைப் பற்றி இறப்பத்தாழ்ந்த எண்ணமும் இருப்பதால், ஒரு சொல்லை வடசொல்லா தென்சொல்லா என்று ஆராயு முன், வடமொழியின் வரலாற்றையும் இயல்பையும் அறிந்துகொள்ளல் வேண்டும்.

வேத ஆரியர் நாவலந் தேயத்திற்குள் கால் வைத்த காலம் கி. மு. 2500. பண்டைக் குமரிக் கண்டத் தமிழர் கி. மு. 10,000 ஆண்டுகட்கு முன்பே, மொழி வளர்ச்சி முற்றிப் பல்துறை யிலக்கியம் படைத்து, நாகரிகப் பண்பாட்டில் நாயகம் பெற்றிருந்தனர். வேத ஆரியர் வேத காலத்திலேயே தமிழரோடு தொடர்பு கொண்டு, தம் மொழியைத் தமிழால் வளம்படுத்தி மெல்ல மெல்லத் தமிழர் கலைநூல்களையும் அதில் மொழி பெயர்த்துக் கொண்டனர். அங்ஙனம் மொழி பெயர்த்ததற்குப் போதிய சொல்வளம் வழக்கற்றுப் போன வேத ஆரிய மொழிக்கின்மையால், அதனொடு அக்காலத்து வட்டார மொழிகளாகிய பிராகிருதங்களைச் சேர்த்து, அமைத்துக்கொண்ட அரைச்செயற்கையான இலக்கிய மொழியே சமற்கிருதமாம். அக்காலத்துப் பிராகிருத மொழிகளுள் தலைமையானது தமிழ். ஆகவே, சமற்கிருதத்தில் $\frac{2}{5}$ பங்கு தமிழ்ச்சொற்களும் தமிழ் வேர்ச்சொற்களினின்று திரிந்த சொற்களுமாயிருக்கின்றன. வேதத்திலேயே, அகவு, தா, சாயம் (சாயுங்காலம்), முத்தம் முதலிய நூற்றுக் கணக்கான தமிழ்ச் சொற்கள் உள்ளன. சமற்கிருதம் தேவ மொழியென்னும் தவறான கருத்து பண்டைத் தமிழர் உள்ளத்திற் பதிந்து விட்டதனால், ஆங்கிலேய ஆட்சி வாயிலாய் ஆங்கிலக் கல்வி ஏற்படும் வரை, பல தென்சொற்களையும் வடசொற்களென்று தமிழர் மயங்கியிருந்தனர். இன்று அம்மயக்கந் தெளிந்து வருகின்

Digitized by Viruba


றது. ஆயினும், நீண்ட காலமாக அடிமைத் தனத்திற் கிடந்து ஊறிப் போன தினால், இன்றும் சில தமிழரும் தமிழ்ப் பேராசிரியரும் தன்னலங்கருதித் தமிழ் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையிடுகின்றனர். எனினும் உண்மை அண்மையில் வெளியாம்.

சென்னை அகராதியில், அச்சன், அச்சு, அப்பம், ஆப்பம், அம் (ஆம், அம்பு) அம்பலம், அரக்கு, அரங்கு (அரங்கம்). அரசு, அரத்தம், ஆசிரியன், (ஆசிரியம்), ஆணி, ஆமைவடை, ஆயிரம், உவணம், (சுவணம்), உவமை, உரு (உருவு, உருவம், உருவு), உலகம், ஐயன், கட்டை, கடகம், கணக்கு, கணி, கம்பு (கம்பம்), கலகம், கழுழன், கலை, காகம், காமம், காலம், குடில், (குடிசை), குடும்பு (குடும்பம்), குண்டம், குமரன் (குமரி), குலம், சமம், சமயம், சாமை, சாயுங்காலம் (சாயுந்தரம்). சாயை, சாலை, சிப்பி, (இப்பி), சிவன், சீர்த்தி, சுக்கு, சும, சுரம், திறம், தாண், தூணி, தாது, தாள், தெய்வம், தோணி, நகர் (நகரி, நகரம், நாகரிகம்), நாகம், நாடி, நாவாய், நாழி, நாழிகை, நாறு, நிலையம், நேயம், பக்கம், பஞ்சி, பட்டம், பட்டயம், பட்டை, படி, (படிமம், படிமை, படிவு, படிவம், வடிவு, வடிவம்), பதிகம், பள்ளி, பல்லி, பாண்டியன், பார்ப்பான், புடல் (புடலை), பிழா, பேழை, பெட்டி, பெட்டகம், புரி, மண்டகம் (மண்டபம்), மதுரை, மந்திரம், மனம், மாதம், மாயை, மாலை, மானம், மீன் (மீனம்), முகிழ் (முகை, மொக்குள்), முத்து (முத்தம்), முரசு, முனி (முனிவன், முனை, முனைவன்), மெது, வட்டம், வடவை, வடை, வண்ணம், வணிகம், வரி, வலம், வால், விடி, வேட்டி முதலிய நூற்றுக்கணக்கான தமிழ்ச் சொற்கள், தமிழ் வடமொழியின் கிளையென்று அயலாரும் ஆராய்ச்சியில்லாதாரும் கருதும் வண்ணம், வடசொற்களாகக் குறிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள், ஆயிரம், ஐயன், காலம், குடும்பு, பெட்டி, முகம், வாய், முதலியவை தமிழுக்கு அடிப்படையானவை. ஆசிரியன், சமயம், சிவன், நகர், நாவாய், மந்திரம், வணிகம், முதலியவை தமிழ் நாகரிகச் சான்றாய் நிற்பவை. பாண்டியன், மதுரை, குமரன், குமரி முதலிய சொற்களை வடசொல்லெனக் கூறுவதால், தமிழர் தலைக்கழகக் காலத்திலேயே ஆரியத் தொடர்புகொண்டு விட்டனரென்றும்; ஆசிரியன், ஐயன், கலை, சிவன், பார்ப்பான், மந்திரம், முனிவன் முதலியவற்றை அங்ஙனங் கூறுவதால், தமிழர் ஆரியரால் நாகரிகப்படுத்தப்பட்டனரென்றும்; அம்பு, ஆசிரியம், உவமை, உருபு, தரங்கம், வண்ணம் முதலியவற்றை அங்ஙனங் கூறுவதால் தொல்காப்பியம் அல்லது தமிழிலக்கணம் வடமொழியிலக்கண வழியதென்றும்; சில ஆரியவழியினரும் கொண்டான் மாருங் காட்ட முயல்கின்றனர்.

இனி, ஒரு சில பேராசிரியர் தமக்கென ஆராய்ச்சியின்றி மேலை மொழி நூலாசிரியர் எழுதியவற்றை மட்டும் படித்துக்கொண்டு, சில பழந்தமிழ்ச் செய்யுட்களையோ நூற்பாக்களையோ ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பட்டம்

Digitized by Viruba


பெற்ற துணையானே, தாமும் மொழிநூலதிகாரிகளெனத்தருக்கி, ஆராய்ச்சி யின் பெயரால் வடசொற்களை யெல்லாம் தென்சொற்களென்று நான் கூறிவருகின்றேன் என்று குழறிவருவதாகக் கேள்வி. இதற்கு அறியாமையும் அழுக்காறும் தன்னலமும் தமிழ்ப்பற்றின்மையுமே காரணம்.

**ஆய்விலா தாரும் அறிவுடையார் ஆய்ந்தார்முன்**
**வாய்திறவா துள்ள விடத்து.**

மேலை மொழிநூல் வல்லார் வேதத்திலும் தமிழ்ச்சொல் கண்டு வெளி யிடும்போது, கீழைத்தமிழ்ப் பேராசிரியர் தூயதென் சொல்லையும் வடசொல் லெனத் துணிவது எத்துணைக் கேடானது !

சென்னை யகராதிப் பதிப்பாசிரியர் திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள் வரைந்துள்ள முன்னுரையில், அவ்வகராதி மற்றெல்லாவகராதிகளினுஞ் சிறந்த தெனக் காட்டுதற்கு எடுத்துக்கொண்ட இரு சொற்களுள் ஒன்றான **வரி** என் பதற்கு, அரசிறை யென்னும் பொருளில் பலி யென்னும் வடசொல்லை மூலமாகக் குறித்துள்ளார். இவ்விரு சொற்கும் சொல்லளவில் ஒரு தொடர்பு மில்லை. வரி என்பது வரித்தல் என்னுஞ் சொல்லினின்று பிறந்தது. **வரித்தல்** – சுற்றிக்கட்டுதல், உழவன் பொலிக்களத்தில் ஆறிலொரு பங்குத் தவசத்தை அரசிறையாகக் கோணிப்பையிற் கட்டுதல்.

மேற்குறித்த சொற்றொகுதியுள், உவமை யென்பது 1959-ஆம் ஆட்டைத் தென்றல் மலரிலும், முகம் என்பது அவ்வாட்டைப் பொழிலிலும், தென் சொல்லென விளக்கப்பட்டுள. ஆண்டுக்காண்க. இங்கு, ஆயிரம், உலகம் ஐயன், வடவை, என்னும் நாற்சொல்லே விளக்கப்பெறும். ஏனையவற்றை என் **தமிழ் வரலாற்றிலும் வடமொழி வரலாற்றிலும்** கண்டு கொள்க.

அயிர் = நுண்மணல். அயிர்–(அயிரம்)–ஆயிரம் = மணல் போற் பெருந் தொகை (1000). ஒப்புநோக்க : நூறு = பொடி, மா, பத்துப்பத்து. அயிரம் – அசிரம்–ஹஸ்ர. ஸ + ஹஸ்ர–ஸஹஸ்ர (வ). அசிரம்–ஹசார் (hazar, H.) hazar (P). வடமொழியில் ஸஹஸ்ர என்னும் சொல்லிற்கு வேர்ப் பொருளில்லை.

சொல்லாக்கத்தில், உயிர்முதற் சொற்கள் மெய்ம்முன்னிட்டு உயிர் மெய்ம்முதற் சொற்களாவது இயல்பு.

எ. டு : அனல் — கனல்
எண் — சேண்
இமை — நிமை
உம்பர் — ஊப்பர் (இ.) —Super (L.).

Digitized by Viruba


யகரம் சகரமாகத்திரிவது பெருவழக்கு.

எ. டு: பயறு — பெசறு (க.)
உயிர் — உசிர் ,,
வயிறு — பசிறு ,,

யகர மெய் சிறுபான்மை வகர மெய்யாகவும் சொல்லிடைத்திரியும்.

எ. டு: நீயிர் —நீவிர்

இம் மூவகைத்திரிபும் பெற்று, ஆயிரம் என்னுஞ் சொல் கன்னடத்தில் சாவிர, சாசிர என வழங்குகின்றது. இதை யறியாது, **பரோவும் எமெனோவும் தொகுத்த திரவிடச் சொல்லியலகராதியில்,** ஸகஸ்ர என்னும் வடசொல்லே ஆயிரம் என்னும் தமிழெண்ணுப் பெயருக்கு மூலமாகக் காட்டப்பட்டுள்ளது. ஸகஸ்ரம் என்பது ஸாவிர எனத் திரிவதைவிட, ஆயிரம் என்பது ஸாவிர எனத்திரிவதே இயல்பு. தென்னாட்டுத் திரவிடச் சொல் ஸகஸ்ர என்னும் வட சொல்லைத் தழுவினதெனின், வடநாட்டு இந்திச் சொல் (hazar) என் அதைத் தழுவவில்லை ? மலையாளத்திலும் குடகிலும் ஆயிரம் என்னும் தமிழ் வடிவே உள்ளது. ஆதலால், சாவிர, என்பது திரவிட வடிவே. சாஸிர என்னும் வடிவே ஸகஸ்ர என்பதன் திரிபாய் இருக்கமுடியும். அதற்கும் அடிப்படை ஆயிரமே. ஆம்பல் (ஏறத்தாழ 565 கோடி), தாமரை (ஏறத்தாழ 4522 கோடி), வெள்ளம் (ஏறத்தாழ 21 இலக்கங் கோடி) என்னும் பேரெண்கள் வழங்கிய தமிழனுக்கா ஆயிரத்தைக் குறிக்கச் சொல்லில்லை ?

உலம் = உருட்சி, திரட்சி, உருண்ட கல்.

உலம்வா—உலமா. உலமருதல் = சுழலுதல், உழலுதல்.

உலக்கை = உருண்டு நீண்ட (பூண்கட்டிய) பெருந்தடி.

உலண்டு = உருண்டு நீண்ட புழு.

உலம்—உலவு. உலவுதல் = சுற்றுதல், திரிதல்.

உலவை = சுற்றி வீசுங் காற்று.

உலா = சுற்றி வருதல், அரசன் வலமாகச் சுற்றி வருகை, அதைப் பாடிய பனுவல்.

உலாவுதல் = சுற்றித்திரிதல்.

உலாத்துதல் = சுற்றித்திரிதல்.

உலாஞ்சுதல் = தலை சுற்றுதல்,

உலம்—உலவு—உலகு. ஒ. நோ : புறம்—புறவு—புறகு.

உலகு = உருண்டையானது. உலகு—உலகம்.

அண்டம், கோளம், globe, sphere முதலிய பிற அல்லது பிற மொழிச் சொற்களும், உருட்சிபற்றி உலகத்தைக் குறித்தல் காண்க.

Digitized by Viruba



உலகம் என்பது உலகத்திலுள்ள மக்களை அல்லது உயர்ந்தோரைக் குறிப்பது இடவாகு பெயர் என்றறிக.

உலகம் என்பது வடமொழியில் லோக்க (loka) என்று திரியும். அதற்கு லோக் என்பதை வேராகக்கொண்டு, பார்த்தல் (look) என்னும் பொருள் கூறப்பட்டுள்ளது (M.S.D.). ஆகவே, லோக்க என்பதற்குப் பார்க்கப்பட்ட இடம் என்பது திரண்ட பொருளாம். இது பொருந்துமா வென்பதை அறிஞர் கண்டுகொள்க.

ஐயன் என்பது வியக்கத்தக்க பெரியோன் என்று பொருள்படும் தமிழ்ச் சொல். இது ஐ என்றும் நிற்கும். "என் ஐ முன் நில்லன்மின்" (குறள்.)

"ஐவியப்பாகும்". என்பது தொல்காப்பியம்—(868)

ஐ + அன் = ஐயன். கடவுள், அரசன், தந்தை, தாய், அண்ணன் என, ஒருவர்க்கு ஐந்து பெரியோர் உளர். அவர்கட்கெல்லாம் ஐ என்னும் பெயர், அல்லது அதனின்று திரிந்த பெயர் பொதுவாம். தாயைக்குறிக்கும்போது ஐயை என்று திரியும். அண்ணனைக் குறிக்கும்போது தமையன் (தம் + ஐயன்) என்று அமையும்.

தமிழருட் பல வகுப்பார், அவருள்ளும் சிறப்பாய்த் தாழ்த்தப்பட்டவர் தந்தையை ஐயன் என்றே அழைக்கின்றனர். ஆசிரியனும் ஒருவகையில் தந்தையொப்பான் என்னும் கருத்துப்பற்றி ஐயன் என்று அழைக்கப்படுவதுண்டு. வடார்க்காட்டுப் பகுதியில் ஆசிரியர் எவ்வகுப்பினராயினும் ஐயர் என்றே அழைக்கப்பெறுகின்றனர்.

பெரியோரையெல்லாம் என்றும் ஐயா என்றே அழைப்பது தமிழர் வழக்கம். அது ஐயன் என்பதின் விளிவேற்றுமை வடிவமாகும். மக்களுட் பெரியோர் முனிவர் என்னும் கருத்துப்பற்றி, அவரைச் சிறப்பாக ஐயர் என்பது தமிழ்நூன் மரபு.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப."

என்று தொல்காப்பியம் [1091] கூறுவது இம்மரபு பற்றியே. இங்ஙனமெல்லாமிருப்பினும், ஐயன் என்பது ஆர்ய என்னும் வடசொற் சிதைவென்று சென்னையகராதி கூறுவது எத்துணை இழிவான செயல்!

வடவை அல்லது வடந்தை என்பது, வடம் (வடக்கு) என்னும் திசைப் பெயரினின்று திரிந்து, வடதிசையில் தோன்றும் நெருப்பு என்று பொருள்படும் தூய தென்சொல். இதற்கு நேரான Aurora borealis என்னும் இலத்தீன் சொல்லும், வடக்கத்து நெருப்பு என்றே பொருள் படுவதாகும்.

Digitized by Viruba


தாயுமானவர் 'வடவனல்' என்றே தெளிவாகச் சொல்லுகின்றார். அங்ஙன மிருந்தும், வடவை என்பதை வடவா—வடவாமுகம்—படபாமுகம் எனத் திரித்து, பெட்டைக் குதிரை முகத்தில் தோன்றும் நெருப்பு எனப்பொருள் கூறுவது, உத்திக்கும் உண்மைக்கும் பொருந்துமா என்று பகுத்தறிவுடையார் கண்டு கொள்க.

இருமொழிகள் சிறிது காலம் அடுத்தடுத்து வழங்கினும், ஒன்றினின் றொன்று கடன் கொள்வது இயல்பு. ஐயாயிரம் ஆண்டுகளாக, நாகரிகம் நிரம்பாது வந்த ஆரியர் மொழியும் நாகரிகம் நிரம்பியிருந்த தமிழர் மொழியும், ஒரேயிடத்தில் வழங்கி வந்திருப்பின், முன்னது பின்னதினின்று எத்துணை ஆயிரக்கணக்கான சொற்களைக் கடன் கொண்டிருத்தல் வேண்டும்! தமிழருட் பெரும்பாலார் தம் தாழ்வுணர்ச்சியால் இதையுணரும் மதுகையில்லாதிருப் பினும், வடமொழி தேவ மொழியாதலால் பிறமொழியினின்று கடன்கொள்ளா தென்னும் ஏமாற்றுரை, ஆராய்ச்சியாளரிடம் எங்ஙனம் செல்லும்? வடமொழி யில் ஆயிரக்கணக்கான தென்சொற்களிருந்தும், வடமொழியகராதிகளுள் ஒன்றுகூட ஒரு சொல்லையும் தென்சொலென ஒப்புக்கொள்வதில்லை. இஃதொன்றே, வடமொழியாருக்குத் தென்மொழி மீதுள்ள வெறுப்பைக் காட்டப் போதுமே!

சென்னை யகராதியில், அகரம் முதல் ஊகாரம் வரை, 506 பக்கம் ஏராள மான தென்சொற்களை, சிறப்பாக, கூட்டுச் சொற்களையும் தொடர்ச் சொற் களையும், வரை துறையின்றி விருப்பம் போல் உடுக் குறியிட்டு வடசொல்லா கக் காட்டியிருக்கின்றனர். கூட்டுச் சொற்களிலும் தொடர்ச் சொற்களிலும் ஒரு சிறு சொல்லை வட சொல்லாகக் கருதினும், அல்லது காட்ட விரும்பினும், உடனே உடுக்குறி யிட்டுவிடுவது வழக்கமாயிருந்திருக்கின்றது.

எ. டு: அகப்பாட்டு வண்ணம், அட்டிற்சாலை, அடுகளம், அரங்கேற்றம் அரசராறுதொழில், அவையல் கிளவி, ஆழிவலியான் மணி, இராப்பள்ளிக் கூடம், ஈரற்பித்து, இருப்பாணி, ஈமத்தாழி, உண்ணாழிகை வாரியம், உதவாக் கட்டை, உம்பருலகு, உரைகாரர், உவகைமுத்து, உவமையாகுபெயர், ஊசற் பயற்றுக்காரி, ஊர்க்கணக்கன்.

இனி, உம்பரார், உயர்ந்தவன் என்னும் இம்மியும் ஐயுறவிற் கிடமில்லாத தென்சொற்கட்கும் உடுக்குறியிட்டிருப்பதும், பிழை திருத்தப்பட்டியில் அவற்றைக் குறியாதிருப்பதும், தொகுப்பாளர் கண் மூடிக்கொண்டு வேலை செய்த கவலையற்ற தன்மையையே காட்டுகின்றது.

Digitized by Viruba


## 2. சொல்வேர்காட்டாமை.

பேசுங்குழந்தைகளும் சிறு பிள்ளைகளும் ஏதேனுமொன்றைக் கண்டு அஞ்சினும், வியக்கினும், இரங்கினும், தம் பெற்றோரை விளிப்பது வழக்கம். இதை அடிப்படையாகக்கொண்டு, பெற்றோரைக் குறிக்கும் பல பெயர்கள் அச்சம், வியப்பு, இரக்கம் முதலியனபற்றிய குறிப்புச் சொற்களாகத் தொன்று தொட்டு வழங்கி வருகின்றன. இவையெல்லாம் ஒரேயொழுங்காகவும் தெளிவாகவும் இருப்பினும், இவற்றை அகராதித்தொகுப்பாளர் பெற்றோர் பெயரடிப் பிறந்தனவாக ஓரிடத்திலும் எடுத்துக்காட்டியிலர்.

| எ. டு. | பெற்றோர் பெயர் | குறிப்புச்சொல் |
|---|---|---|
| | அக்கை | அக்கே, அக்கோ, அகோ |
| | அச்சன் | அச்சோ |
| | அத்தன் | அத்தோ, அந்தோ |
| | அப்பன் | அப்பா |
| | அம்மை | அம்ம, அம்மவோ, அம்மகோ, அம்மா, அம்மனேயோ, அம்மே, அம்மோ |
| | அன்னை | அன்னே, அன்னோ |
| | ஐயன் | ஐய, ஐயவோ, ஐயகோ, ஐயா, ஐயே, ஐயோ |

## 3. வழுவேர் காட்டல்

கோவணம் என்னும் வடசொற்கு நேர் தென்சொல், குளிசீலை, தாய்ச்சீலை, நீர்ச்சீலை என்பன. குளிசீலை என்பது குளிக்கும்போது கட்டிக்கொள்ளும் துணி என்று பொருள்படுவது. இதைக் குழிசீலை என்ற வடிவிலும் காட்டி, குழி என்பதை, குழியாக்குதல் அல்லது செதுக்குதல் என்று பொருள்படுஞ் சொல்லாகக் குறித்திருக்கின்றது சென்னையகராதி.

தக்காளி என்பது, மணித்தக்காளி, எருமைத்தக்காளி, சீமைத்தக்காளி எனப் பலதிறப்படும். இவற்றுள் மிகச்சிறியது மணித்தக்காளி. மணி என்பது சிறுமைப் பொருள் உணர்த்தும் முன்னொட்டு. மணிக்கயிறு, மணிக்காக்கை, மணிக்காடை, மணிக்குடல், மணிப்பயறு, மணிப்புறா என்னும் சொற்களை நோக்குக. சென்னையகராதி, மணித்தக்காளி என்பதை மணத்தக்காளி எனத்தவறான வடிவிலுங்குறித்ததோடமையாது, அதையே மூலமாகவுங் கொண்டு மணமுள்ள தக்காளி எனப்பொருள் கூறியிருக்கின்றது.

தேங்காய் திருகியைத் தேங்காய் துருவி எனக்குறித்துத் தேங்காய் துருவுங்கருவி எனப்பொருட்காரணங்காட்டுகின்றது சென்னையகராதி. திருகுதல்—சுறண்டியெடுத்தல். துருவுதல்—ஊடுருவுதல்.

Digitized by Viruba



ஆமைவடையென்பதை வடசொல்லாகக் காட்டவேண்டி, 'ஆமை'யை ஆ… என மாற்றி, நன்றாய் வேகாதது எனப்பொருள் கூறியுள்ளனர் அகராதியாளர். நன்றாய் வேகாத வடையை நாள்தோறும் சுடுவாரும் விற்பாரும் தின்பாரும் எத்துணைப் பேதையராய் இருத்தல் வேண்டும்!

## 4. ஐயுற்றுக் கூறல்

பகுதி அல்லது பிரிவு என்று பொருள்படும் பால் என்னும் சொல்லிற்குப் பகு என்பதும், மருமகனை அல்லது வழிவந்தோனைக் குறிக்கும் மருகன் என்னும் சொல்லிற்கு மரு (மருவு) என்பதும், தெளிவான மூலமாய் அல்லது பகுதியாயிருந்தும், ஒருகால் (Perhaps) என்றும், மெய்வாய்ப்புள்ளதாய் (Probably) என்றும், அடைகொடுத்து உண்மையின் திண்மையைக் குறைத்திருக்கின்றனர்.

வேந்தன் என்னும் தூய தென்சொல்லைத் தேவேந்தர், என்பதோடும், மருந்து என்னும் தனித் தமிழ்ச்சொல்லை அம்ருத என்பதோடும், ஒப்பு நோக்கு மாறு குறும்புத்தனமாய்க் குறித்திருக்கின்றது சென்னையகராதி.

வேய்ந்தோன் (முடியணிந்தோன்) — வேந்தன். தேவ + இந்திரன் = தேவேந்திரன்.

மருந்து — சிறப்பான மணமுள்ள தழை அல்லது சரக்கு.

அம்ருத — மரணத்தைத் தவிர்ப்பது என்று சொல்லப்படுவது.

## 5. தலைமாற்றிக் கூறல்.

குமரிக் கண்டத் தமிழ் வடக்கே சென்று திரவிடமாய்த் திரிந்தது. வடகோடித் திரவிடம் நாளடைவில் பிராகிருதமாய் மாறியது. வேத காலத்தில், விந்திய மலைக்கு வடக்கில், பைசாசம், சூரசேனம், மாகதம் என மூன்று பிராகிருதங்களும், அதற்குத் தெற்கில், தமிழ், ஆந்திரம் (தெலுங்கு), கன்னடம், மகாராட்டிரம், கூர்ச்சரம் என்னும் ஐந்துதிரவிடங்களும் (பஞ்ச திராவிடம்) வழங்கி வந்தன. பிற்காலத்தில், ஐந்திரவிடங்களுள், மகாராட்டிரம் ஒரு பிராகிருதமாகவும், தமிழ், கன்னடம், தெலுங்கு மூன்றும் சேர்ந்து (திராவிட என்னும்) ஒரு பிராகிருதமாகவும் கொள்ளப்பட்டன. மாகதத்தின் பிற்காலத் திரிவு பாலி. பிராகிருதம் என்னுஞ்சொல் தமிழில் பாகதம் எனத் திரியும்.

வேத ஆரியம் வழக்கற்றுப் போனபின், அதனொடு ஐம்பிராகிருதங்களையும் கலந்து சமற்கிருதம் என்னும் இலக்கிய மொழியை அமைத்தனர். பிராகிருதம் முந்திச் செய்யப்பட்டது. சமற்கிருதம் — நன்றாய்ச் செய்யப்பட்டது. ஆகவே சமற்கிருதத்திற்கு முந்தியது பிராகிருதம், பிராகிருதத்திற்கு முந்தியது

Digitized by Viruba


திரவிடம். திரவிடத்திற்கு முந்தியது தமிழ். இவ்வுண்மையை மறைத்துப் பின்வருமாறு பல தமிழ்ச் சொற்கட்குத் தலைகீழாய் மூலங்காட்டப்பட்டு வருகின்றது; சென்னையகராதியிலுங் காட்டப்பட்டுள்ளது.

எ. டு:

| சமற்கிருதம் | பிராகிருதம் | தமிழ் |
|---|---|---|
| வ்ருத்த > | வட்ட > | வட்டம் |
| ஸ்நேக > | நேயம் > | நேயம் |
| | அய்ய > | ஐயன் |
| | கட்ட > | கட்டை |
| | கம்ப > | கம்பம் |

இப்பட்டியைக் கீழ்வருமாறு தலைமாற்றுக.

| தமிழ் | பிராகிருதம் | சமற்கிருதம் |
|---|---|---|
| வட்டம் > | வட்ட > | வ்ருத்த |
| கம்பம் | கம்ப | |

அய்ய, கட்ட, கம்ப என்னும் பிராகிருதச் சொற்கட்கு, ஆர்ய, காஷ்ட்ட, ஸ்தம்ப என்னும் சமற்கிருதச் சொற்களை, முறையே, மூலமாகக் காட்டுவர். அது முழுவழு. இதன் விரிவெல்லாம் என் **வடமொழி வரலாறு** என்னும் நூலுட் கண்டு கொள்க.

இனி, சில தமிழ்ச் சொற்களைத் திரவிட வருதுச் சொற்களின் திரிபாகவுங் காட்டுவர்.

எ. டு: கும்பு < T. கும்பு (கூட்டம்), வாங்கா–வங்கா < U. பாங்கா.

## 6. கூட்டுச்சொல்லை வழுப்படப்பிரித்தல்

ஒருவர் மெலிந்து, தோலும் எலும்புமாய்ப் போவதை, உடக்கெடுத்துப் போதல் என்பது மரபு. உடக்கு–தோலும் எலும்புமானநிலை. உடக்கு எடுத்தல் உடக்கெடுத்தல். இதை உடல் கெடுத்தல் என்று பிரிக்கின்றது அகராதி.

மாலை நேரத்தில் கதிரவன் இறங்குவதைப் பொழுது சாய்தல் என்பது மரபு. பொழுது சாய வந்தான் என்பது இன்றும் வழக்கமாயிருக்கின்றது. பொழுது சாயும்மாலை சாயுங்காலம் எனப்படும். இதைச் சாயுந்தரம் என்றும் சொல்வர். சாயுங்காலம் என்பது, சாயங்காலம், சாய்ங்காலம் என்றும், சாயுந்தரம் என்பது, சாயந்தரம், சாய்ந்தரம் என்றும், மருவும். வடமொழியாளர் சாயங்காலம் என்பதைச் சாயம் காலம் எனப்பிரித்து, சாயம் என்னும் சொல்லை மாலை என்னும் பொருளில் ஆண்டு கொண்டனர். அதன்பின்,

Digitized by Viruba



சாயம் (ஸாயம்) என்னும் வடசொல்லினின்றே சாயங்காலம் என்னும் தமிழ்ச் சொல் வந்ததென்று சொல்லவுந் துணிந்துவிட்டனர். இக்கொள்கையே சென்னை யகராதியுங் கொண்டுள்ளது. அதனால், சாயுங்காலம், சாயுந்தரம் என்னும் வடிவுகளை அது காட்டவில்லை. அதோடு, சாயந்தரம் என்பதைச் சாயம் + அந்தர(ம்) என்றும் பிரித்துள்ளது.

இங்ஙனமே, முகம்—முகன் (mukha) என்பதை மு + கன் என்றும், நிலையம் (நிலய) என்பதை நி + லய என்றும், பிரித்து வடசொல்லாகக்காட்டுவர். முகு + அம் = முகம். நில்—நிலை—நிலையம்.

இவ்வாறு தென்சொற்களைத் தன் சொற்களென்று காட்டும் வடநூல் ஏமாற்றமெல்லாம் என் **வடமொழி வரலாறு** விரிவாக விளக்கும்.

## 7. ஒரு சொல்லைப் பல சொல்லாகக் காட்டல்

இறுத்தல் என்னும் சொல்லுக்குரிய, முடித்தல் (தீர்த்தல்), வரி கொடுத்தல் என்னும் இருபொருளும் நெருங்கிய தொடர்புடையவை. ஒரு காவலன் தன் குடிகளைக் காக்கின்றான். அக்காப்புப்பற்றிக் குடிகள் அவனுக்குக் கடன்பட்டுள்ளனர். அக்கடனைத் தீர்ப்பதே இறை அல்லது வரி. இறுப்பது இறை. இறுத்தல்—தீர்த்தல், கடன் தீர்த்தல். தீர்த்தல் (முடித்தல்), வரி கொடுத்தல் ஆகிய இருபொருளையும் வேறாகக்கொண்டு, இறுத்தல் என்னும் ஒரே சொல்லை இருசொல்லாகக் காட்டியுள்ளது சென்னை யகராதி.

இங்ஙனமே, தீர்த்தல், தீர்வை என்னும் இரண்டும் தீர் என்னும் ஒரே சொல்லாகும். இதனையும் இருசொல்லாகக் காட்டியுள்ளது அவ்வகராதி. Fine என்னும் சொல்லைப்பற்றி ஆக்கசுப் போர்டுச் சிற்றகராதி எழுதியிருப்பதைப் படித்து, இவ்வுண்மை தெளிக.

## 8. பல சொல்லை ஒரு சொல்லாகக் காட்டல்

கரைதல் என்னும் சொல்லிற்கு,

(1) கரைந்துபோதல்,
(2) உருகுதல்,
(3) இளைத்தல்,
(4) கெடுதல்,
(5) வருந்துதல்,
(6) தாமதித்தல்,
(7) ஒலித்தல்,
(8) அழுதல்,
(9) பதனழிதல்,
(10) அழைத்தல்,
(11) சொல்லுதல்,

எனப் பல பொருள்கள் கூறப்பட்டுள. இவற்றுள், முதலாறும் ஒன்பதாவதும் மறைதற் பொருள்தரும் கர என்னும் வேரினின்று பிறந்த கரை என்னும்

Digitized by Viruba


சொல்லிற்குரியவாம் ; ஏனையவெல்லாம் ஒலித்தற் பொருள் கொண்ட கர என்னும் வேரினின்று தோன்றிய வேறொரு கரை என்னும் சொல்லிற்குரியவாம். இங்ஙனம், இரு வேறு சொற்கள் வடிவொப்புமை பற்றி ஒரு சொல்லாகக் காட்டப்பட்டுள.

கள் என்னும் வேரினின்று பிறந்த கட்டை (திரண்ட மரத்துண்டு) யென்னும் சொல்லும், குள் என்னும் வேரினின்று பிறந்த குட்டையென்னுஞ் சொல்லின் திரிபான கட்டை யென்னும் சொல்லும், வெவ்வேறாம். ஆயினும், இவற்றை ஒரே சொல்லாகக் கொண்டுள்ளது அகராதி. இதற்கெல்லாம் தொகுத்தவரின் சொல்லாராய்ச்சியின்மையே காரணம்.

## 9. தொழிற்பெயரின் திரிபே முதனிலையெனல்

பொதுவாக, முதனிலையினின்றே தொழிற்பெயர் திரிக்கப்படும். ஆயின், சென்னை யகராதி தொழிற்பெயரினின்று முதனிலையைத் திரிக்கின்றது.

எ. டு : நடம் > நடி.

இதற்குக் காரணம், நடி என்னும் சொல்லை வட சொல்லாகக் காட்ட வேண்டும் என்பதே.

நள்—நளி. நள்ளுதல் = பொருந்துதல். 'நளிய' ஓர் உவம வுருபு.

நளிதல் = ஒத்தல். நளி—நடி. ஒ. நோ : களிறு—கடிறு.

நடித்தல் = ஒத்துச் செய்தல்.

நடி + அம் = நடம். ஒ. நோ. குறி + அம் = குறம்.

நடம்—நட்டம் — நட்ட (பி.) — ந்ருத்த (வ.).

ஒ. நோ : படம்—பட்டம் = துணி.

ஒ. நோ : வள் —வட்டு—வட்டம்—வட்ட (பி.)—வ்ருத்த (வ.).

நட்டம்—நட்டணம், நட்டணை. ஒ. நோ : வட்டம்—வட்டணம், வட்டணை.

நட்டம்—நட்டவம்—நட்டுவம்—நட்டுவன்.

"நட்டவஞ் செய்ய நட்டவம் ஒன்றுக்கு...பங்கு" (S. I. I. ii, 274).

ஒ. நோ : குட்டம்—குட்டுவன் = குட்ட நாட்டான், சேரன்.

முட்டு என்னுஞ் சொல்லொடுகூடி, நட்டுவம் என்பது நட்டு எனக் குறுகிற்று. நட்டுமுட்டு = நட்டுவ இசைக் கருவிகள். நட்டுமுட்டுவர் = நட்டுவ மேளகாரர்.

நடி + அனம் = நடனம். ஒ. நோ : படி + அனம் = படனம்.

நடனம் — நடலம் (கொச்சை).

நடி + அகம் = நாடகம். ஒ. நோ : படி + அகம் = பாடகம்.

Digitized by Viruba


தலைக்கழகக்காலத்திலிருந்து, தமிழ் இயல் இசை நாடகம் என முத்தமிழாய் வழங்கி வந்திருக்கின்றது. இயல், இசை என்பன போன்றே, நாடகம் என்பதும் தமிழ்ச்சொல். கூத்து என்னும் வேறொரு சொல்லிருப்பதால், மொழியாராய்ச்சியில்லாதாரும் தென்சொல்வளத்தை யறியாதாரும், நாடகம் என்பதை வட சொல்லெனக் கருதுகின்றனர். கால்டுவெல் கண்காணியார் தமிழின் சொல்வளத்தை விளக்கவந்த விடத்து, "தமிழ் தனக்கே யுரிய வீடு என்னுஞ் சொல்லோடு, தெலுங்கில் வழங்கும் இல் என்னுஞ் சொல்லையும், கன்னடத்திற் சிறப்பாய் வழங்கும் மனை என்னுஞ் சொல்லையும், சமற்கிருதத்திலும் பின்னிய (Finnish) மொழிகள் எல்லாவற்றிலும் வழங்கும் குடி என்னுஞ் சொல்லையும், தன்னகத்துக் கொண்டுள்ளது." என்று கூறியிருத்தலை நோக்குக.

நட்ட என்னும் பிராகிருத வடிவினின்று நாட்டிய(ம்) (நாட்ய) என்னும் வட சொல்லை வடவர் அமைத்துக்கொண்டு, ந்ருத்த என்னும் வடிவின் முதலசையாகிய ந்ருத் என்பதையே, நடி என்னும் பகுதியினின்று தோன்றியுள்ள எல்லாச் சொற்கட்கும் மூலமாகக் காட்டுகின்றனர். ந்ருத் என்பதற்குவேர்ப் பொருளே இல்லை. ஆயினும், முன்பு காட்டியதுபோல், ந்ருத்=ந்ருத்த (வ.) > நட்ட (பி.) > நடி (த.). எனத் தலைகீழாய்க் காட்டுகின்றனர். நடனம் என்பதை நட்டன (வ.) என்பதன் திரிபாகவும், நட்டணம்,நட்டண என்பவற்றை நர்த்தன என்பதன் திரிபாகவும், காட்டுகின்றனர்.

ந்ருத் — நர்த்த — நர்த்தந (வ.) > நட்டணம் (த.) என்பது வடமொழியாளர் கொள்கை.

அடி, கடி, பிடி என்னுஞ் சொற்கள் போன்றே, நடி என்பதும், தமிழில் ஆட்டம் என்னும் பொருளில் முதனிலைத் தொழிற் பெயராய் வழங்கும்.

"நடிகொள் நன்மயில் சேர் திருநாரையூர்" (தேவா. 216,5).

நடம் என்னும் தொழிற் பெயரினின்று, நடன் என்னும் ஆண்பாற் பெயரும் நடி (பிங்.) என்னும் பெண்பாற் பெயரும் தோன்றும்.

"வளிநடன் மெல்லிணர்ப் பூங்கொடி" (பரிபா. 22, 42).

நடனம் என்னும் தொழிற் பெயரினின்று, நடனன் என்னும் ஆண்பாற் பெயரும் நடனி என்னும் பெண்பாற் பெயரும் தோன்றியுள்ளன.

"நடனன் பாங்குற நடிப்பது" (இரகு : குடனயோத்தி : 98).

"நடனியர் தம்மின் மன்னே" (இரகு. ஆற்று. 20).

நடிகன், நடிகை என்னும் இருபாற் பெயரும், முறையே, natika, natikā என்னும் வடசொற்களின் திரிபென்றும், இக்காலத்தனவென்றும், சென்னையகராதியிற் குறிக்கப்பட்டுள்ளது.

Digitized by Viruba



nata, nataka என்பவை நடிகனைக் குறிக்கும் பெயர்கள் என்று மானியர் உல்லியம் அகராதியிலும், நடன், நடி என்னும் இரு தென்சொல்லும் nata, nati என்னும் வடசொல்லின் திரிபென்று சென்னையகராதியிலும், குறிக்கப்பட்டுள்ளன.

ஒருவன் தன்னிடம் இல்லாததொன்றை இருப்பதாகக் காட்டிப் பாசாங்கு செய்யும்போது, கூத்தாடுகிறான் என்று சொல்லாமல் நடிக்கிறான் என்று சொல்வதையும், இவ்வழக்கு நாட்டுப்புற மக்கள் பேச்சிலும் தொன்று தொட்டு இருந்து வருவதையும், ஊன்றி நோக்குக.

## IV இலக்கண வழுக்கள்

### 1. இலக்கணக் குறிப்பு வழு.

(1) அக்கடாவெனல் ஓர் ஒலிக் குறிப்பு வெளிப்பாடு (Onomatopoetic Expression) என்று குறிக்கப்பட்டிருக்கின்றது. அது ஓர் அசாவிடுதற் குறிப்பே (Exclamation of repose).

(2) அகச்சுட்டு என்பது, சுட்டு முன்னொட்டு (Demonstrative prefix) அன்று; சுட்டடியே (Demonstrative base).

(3) அஞ்சலப்பெட்டி, அஞ்சாரப்பெட்டி என்பவை அஞ்சறைப் பெட்டி என்பதன் கிளை வழக்கு வேறுபாடு (Dialectic variation) அல்ல; கொச்சைத் திரிபே.

(4) செய்யட்டும் என்னும் ஏவல் வினையில், அட்டும் என்பது வியங்கோள் விகுதியன்று; ஒரு துணைவினையே.

### 2. ஏவல் வினையின் எண் குறியாமை.

செய்யட்டு என்னும் ஏவல்வினை ஒருமையும், செய்யட்டும் என்னும் ஏவல் வினை பன்மையும், ஆகும்; செய்யவிடு, செய்யவிடும் என்பவை போல். இவ் வெண்வேறுபாடு அகராதியிற் குறிக்கப்படவில்லை.

## V. மரபு வழுக்கள்.

### 1. சொல் வழு.

அம்மை வார்த்தலை அம்மை போடுதல் என்பது மரபு. அதை அம்மை போட்டுதல் என்று குறித்து, அவ்வழுவை அழுத்திக் காட்டினாற்போல் "வீட்டில் குழந்தைக்கு அம்மை போட்டியிருக்கிறது" என்று எடுத்துக் காட்டும் தரப்பட்டிருக்கின்றது.

Digitized by Viruba


போட்டு என்பது புகட்டு என்பதன் மரூஉ. பால் போன்ற நீர்ப்பொருள் தான் போட்டப்படும்.

## 2. உருபு வழு.

கரைத்துக் குடித்தல் என்னும் கூட்டுவினைச் சொற்கு, "உணவு முதலிய வற்றைத் திரவ பதார்த்தத்தால் கலக்கி உட்கொள்ளுதல்." எனப் பொருள் கூறப்பட்டிருக்கின்றது. இதில், 'திரவ பதார்த்தத்தால்' என்பது 'திரவ பதார்த்தத்தில்' என்றிருத்தல் வேண்டும்.

# VI. அகராதியமைப்பு வழுக்கள்

## 1. ஒரேயளவான எழுத்தால் எல்லாச் சொற்களையுங் குறித்தல்

வின்சிலோ (Winslow) அகராதியில், அடிப்படைச் சொற்கள் பெரிய எழுத்திலும், அவற்றினின்று திரிந்துள்ள தனிச்சொற்களும் கூட்டுச்சொற்களும் சிறிய எழுத்திலும், அச்சிடப்பட்டிருக்கின்றன. அதுவே சரியான முறையாம். சென்னையகராதியில் அஃதன்றி, எல்லாச் சொற்களும் சிறிதும் வேறுபாடின்றி ஒரேயளவான எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. இதனால், ஆராய்ச்சியில்லாதார் அல்லது புலவரல்லாதார் சொற்றிரிவு முறையை அறியவும், இயற்சொல்லையும் திரிசொல்லையும் பிரித்துணரவும் இயலாதிருக்கின்றது.

## 2. பிறந்தையின்கீழ் இனங்களையும் இனத்தின்கீழ் வகைகளையும் காட்டாமை

வின்சிலோ அகராதியில், பருத்தி என்னும் சொல்லின்கீழ், காட்டுப் பருத்தி, செம்பருத்தி, தாளிப்பருத்தி, பட்டுப்பருத்தி, பூப்பருத்தி, பேய்ப் பருத்தி, மலைப்பருத்தி, வெண்பருத்தி, வேலிப்பருத்தி முதலிய பலவகைகள் காட்டப்பட்டுள்ளன. இங்ஙனமே பிற பொருள்வகைகளும் அவ்வவ்விடத்திற் காட்டப்பட்டுள்ளன. இம்முறையினால், ஒரு பொருளின் வகைகளையெல்லாம் ஒரேயிடத்தில் ஒருங்கே காணமுடிகின்றது. விடுபட்டுப்போன வகைகளையும் உடனே கண்டுகொள்ளலாம்.

சென்னையகராதியில், எல்லாப்பொருள்களையும் அவற்றைக் குறிக்கும் சொற்களின் அகர வரிசைப்படி குறித்திருப்பதால், ஒரு பொருளின் வகைகளைக் காண்பதற்கு எல்லா மடலங்களையும் புரட்டவேண்டியிருக்கின்றது. இது இயலாத செயல். அதோடு, விடுபட்டுப்போன வகைகளையும் எளிதாய் அறிந்து கொள்ளமுடிவதில்லை. எடுத்துக்காட்டாக, அவரை வகைகளைச் சொல்லலாம். ஆரால்மீன் அவரை, ஆனைக்காதவரை, கொழுப்பவரை முதலிய வகைகள் சென்னையகராதியிற் குறிக்கப்படவில்லை.

Digitized by Viruba


இங்ஙனமே, உருண்டையரம், கத்தியரம், சீட்டியரம், பூவரம், பொந்தரம், முதுகரம், முள்ளரம் முதலிய அர வகைகள் விடப்பட்டுள்ளன.

## VII. அகராதியாசிரியர் குறைகள்

சென்னைப், ப. க. க. த. அகராதியைத் தொகுத்த ஆசிரியருள் தலைமையான பொறுப்பு வாய்ந்தவர், அகராதிப் பணிக்குழுவின் தலைமைத் தமிழ்ப் பண்டிதரான பெரும்புலவர் **மு. இராகவையங்காரும்** பதிப்பாசிரியர் **திரு. வையாபுரிப் பிள்ளை** அவர். **மறைமலையடிகளும்,** தமிழ் வடமொழித் துணை அல்லது பிறமொழித் துணை வேண்டாத தனிமொழியென்னுங் கொள்கையினரும், அகராதியாசிரியர் குழுவிற் சேர்க்கப்படவேயில்லை.

### 1. தமிழ்ப் பற்றின்மை

**திரு. வையாபுரிப் பிள்ளை** இருபதாம் நூற்றாண்டுக் கொண்டான் என்பது அனைவரும் அறிந்ததே. அவரது சிறந்த ஆராய்ச்சியெல்லாம், தென்சொல்லை வடசொல் என்பதும், தென்னூலை வடநூன் மொழிபெயர்ப்பென்பதும், தமிழ்க்கலையை ஆரியக்கலையென்பதுமே. அவர் வடமொழியறிஞர்தான். ஆயின் வடசொல் தென்சொல் வேறுபாடறியும் மொழிநூலறிஞரல்லர். பெரும்புலவர் **மு. இராகவையங்கார்,** "செட்டி மக்கள் வாசல்வழி" என்னும் கம்பர் வெண்பாவில், 'முட்டிபுகும் பார்ப்பார்' என்னுந் தொடரில், 'முட்டி புகும்' என்பதை 'இட்டமுடன்' என்று மாற்றியவர்; "ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்னும் தொல்காப்பிய அடியில் வரும் 'ஐயர்' என்னுஞ் சொல்லுக்கு 'ஆரிய மேலோர்" என்று பொருளெழுதியவர். பட்டயப் பாவலர் வரலாறு என்று பெயரிடக்கூடிய தம் வெட்டெழுத்துப் புலவர் வரலாற்றிற்குச் சாஸன தமிழ்க்கவி சரிதம் எனப் பெயரிட்டவர்.

### 2. தவறான கருத்துடைமை

இவ்விருவரும், தமிழ் வடமொழி வழியதென்று தவறான கருத்துடையவர்.

### 3. கவனமின்மை

இருவரும், ஏறத்தாழ 750 அச்சுப்பிழைகள் நேரவிட்டும், அவற்றுள் 717-ஐ மட்டும் பிழை திருத்தப்பட்டியிற் காட்டியும், பிந்தித் தொகுத்த சில சொற்களைப் பின்னிணைப்பு மடலத்திலும் சேர்க்காதும், கவலையற்றும கவனமின்றியும் அகராதியை வெளியிட்டவர்.

### 4. சொற்றொகுப்பு முறையறியாமை

இருவரும் முதற்கண் சொற்றொகுக்கும் முறையை அறியாது, வின்சிலோ அகராதியையே அடிப்படையாக வைத்துக்கொண்டு வேலை செய்து வந்தனர்.

Digitized by Viruba


பின்னர், பண்டைத் தமிழிலக்கியத்தில் பன்னூற்றுக் கணக்கான சொற்களுண்மையையும், அதன்பின்னர், உலகவழக்கில் ஆயிரக்கணக்கான சொற்களுண்மையையும், தாமாகவும் பிறர்காட்டவும் கண்டுகொண்டு, அவற்றையெல்லாம் தொகுத்தனுப்பும்படி பல கழகங்களையும் தனிப்பட்ட அறிஞர்களையும் வேண்டி, இலவசமாகப் பேருதவி பெற்று வந்தனர்.

அதன்பின்பும், நெடுஞ்சினை, சினைமுதற்பெயர், வண்ணச்சினைச் சொல், தடுமாறு தொழிற்பெயர் முதலிய தொல்காப்பியச் சொற்களும்; அந்தரக்கோல், கண்ணெழுத்து, பண்மொழி நரம்பு முதலிய சிலப்பதிகாரச் சொற்களும்; தகைப்பு, புகுவாயில், புறப்படுவாயில் முதலிய அடியார்க்கு நல்லாருரைச் சொற்களும்; கருங்களமர், கருமுகமந்தி, செம்பினேற்றை முதலிய நச்சினார்க்கினியருரைச் சொற்களும்; இல்லற வெள்ளை, ஐம்படை விருத்தம், செந்தமிழ் மாலை, யானைத்தொழில், வேந்தன்குடைமங்கலம் முதலிய பன்னிரு பாட்டியற் சொற்களும்; கணக்குவாரியம், கலிங்குவாரியம், குடும்புவாரியம், தடிவழிவாரியம், பொன்வாரியம் முதலிய கல்வெட்டுச் சொற்களும்; நூற்றுக்கணக்கான உலக வழக்குச்சொற்களும், அகராதியில் இடம் பெறவில்லை. தமிழுக்கு வேண்டாத டர் (அச்சம்), லக்கிடி (விறகு) போன்ற இந்திச்சொற்கள் மட்டும் ஏராளமாய் இடம்பெற்றுள்ளன.

வின்சிலோ அகராதியை அடிமணையாகக் கொண்டிருந்தும், அதிலுள்ள பொருள்களைக்கூடச் சரியாய்ப் பெயர்த்தெழுதவில்லை.

எ. டு: "பன்னுகிறேன்....

4. To recite or interpret word by word விவரிக்க"

இவற்றையெல்லாம் நோக்கும்போது, தமிழைக் கெடுக்கவேண்டுமென்றே இருவருங்கூடி வேலை செய்தார்போலும், என்றெண்ண இடந்தருகின்றது.

கனம் சான்றிலர் (Rev. J. S. Chandler) துரைமகனார் முதல் நான்காண்டு அகராதிக்குழுத் தலைவராயிருந்தபோது, பாம்பன் சென்று, துறைமுக அதிகாரியையும், தமிழ மீகாமரையும், செம்படவரையும் கண்டு, நாவாய்த்துறைச் சொற்களையும் அவற்றின் சரியான பொருள்களையும் கேட்டறிந்து வழிகாட்டியும், அதைப்பின்பற்றியிலர்.

## 5. தொல்காப்பியர் கூற்றைப் பிறழவுணர்தல்.

தமிழ் வடமொழிக்கு முந்திய முழுவியற்கை மொழியாதலால் அதிலுள்ள எல்லாச் சொற்களும் வேர்ப் பொருள் கொண்ட கரணிய (காரண)க் குறிகள். சமற்கிருதம் தமிழுக்குப் பிற்பட்ட அரைச் செயற்கை மொழியாதலின், அதிலுள்ள சொற்களுள் ஒரு சாரன கரணியக் குறிகள்; ஒரு சாரன வேர்ப் பொருளற்ற இடுகுறிகள். திரு. வையாபுரிப் பிள்ளை வடமொழியடிப்படை

Digitized by Viruba


யில் தமிழ் கற்றவராதலின், தமிழ்ச் சொற்களுள்ளும் இடுகுறி யுண்டெனப் பவணந்தியார் கூறியதை நம்பியதுடன், தம் அறியாமையைத் தொல்காப்பியர் மீதும் ஏற்றி, அவர் "மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்ரு." (877) என்று கூறியதற்கு, சொற்களின் பொருட்காரணியத்தைக் கண்டுபிடிக்க முடியாதென்று பொருள் கொண்டார். தொல்காப்பியர் 'தோன்ரு' என்று மட்டுங் கூருமல், "விழிப்பத் தோன்ரு" என்று கூறியுள்ளார். ஒருவனது பேசுந் திறனைக் குறிக்கும்போது, விரைவாய்ப் பேசமாட்டான் என்பதற்கும், பேச மாட்டான் என்பதற்கும் மிகுந்த வேறுபாடுண்டு. அங்ஙனமே, 'தோன்ரு' என்பதற்கும் "விழிப்பத் தோன்ரு" என்பதற்கும். "விழிப்பத் தோன்ரு" என்பது விளக்கமாய் அல்லது பார்த்தமட்டில் தோன்ருது என்றே பொருள்படும். ஆகவே, ஊன்றி நோக்கிஞல் தோன்றும் என்பதாம்.

புடலங்காய் என்னும் தமிழ்ச் சொல், மலையாளங் கன்னடத்தில் படோலங்கா என்றும், சமற்கிருதத்தில் பட்டோலிக்கா என்றும் திரிந்து வழங்குகின்றது. சமற்கிருத வடிவிற்கு வேர்ப் பொருளே காண முடியாது. மலையாள வடிவிற்கு நீண்ட ஆராய்ச்சி செய்துதான் காண முடியும். தமிழ் வடிவிற்கோ, பார்த்த மட்டில் முடியாவிடினும், சற்று ஊன்றி நோக்கிஞல் எளிதாய் முடியும்.

புடலை + காய்=புடலங்காய். புடல்—புடலை. புழல்—புடல். ஒ. நோ. குழல்—குடல். பிற காய்கள் போல் கட்டியாயிராது புழலாய் (உட்டுளையுள்ளதாய்) இருப்பது புடலங்காய்.

"விழிப்பத் தோன்ரு" என்பது 'தோன்ரு' என்றே பொருள்படுவதாயின், "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" (640) என்று வேருேரிடத்தில் அவரே எங்ஙனம் முரண்படக் கூறியிருக்க முடியும்? இதைக் கூடப் பதிப்பாசிரியர் எண்ணிப்பார்த்திலர்.

மேலும், பழம் பாண்டிநாடான குமரிக் கண்டம் முழுகிப் பண்டைத் தமிழிலக்கியமெல்லாம் இறந்துபட்டு ஆயிரக்கணக்கான சொற்கள் மறைந்து, கடைக் கழகத்தின் பின் ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டு கழிந்துள்ள இற்றை நிலையிலும், நூற்றுமேனி 75 சொற்கட்கு வேர்ப் பொருள் காணலாமெனின், கி. மு. 7 நூற்ருண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியர் காலத்தில் தமிழ்ச் சொற்கட்கெல்லாம் வேர்ப் பொருள் காணும் வாய்ப்பு எத்துணை மிகுதியாயிருந்திருக்கும்!

## 6. புலாலுணவறியாமை.

தலைமைத் தமிழ்ப் பண்டிதரும் பதிப்பாசிரியருமாகிய இருவரும் மரக்கறியுணவினர். அதஞல், ஊனுணவுப் பொருள்களைத் தாமாக அறியவோ, பிறர் அவற்றைப்பற்றித் தவருயெழுதின் அத்தவற்றைக் கண்டுபிடிக்கவோ, ஆற்றலி

Digitized by Viruba


லாராயினர். அதனாலேயே, குறவையை வராலென்றும், வராலைக் கொண்டை யென்றும், மண்ணீராலைக் கல்லீரலென்றும், கொழுப்புக் குடலைச் சிறுகுடலென்றும், தம்போல்வார் எழுதியனுப்பியதை எழுதியபடியே அச்சிட்டுள்ளார்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதி இத்துணைச் சீர்கேடடைதற்கு, அவ்வகராதிக் குழுத்தலைவரும் உறுப்பினரும் ஓரளவு கரணியம் (காரணம்) ஆவர். அகராதிக் குழுத் தலைவராயிருந்த நால்வருள், பின் மூவரும் பிராமணர். தொடக்கத்தில் அமைந்திருந்த அகராதிக்குழுவில் பல மேனாட்டார் இருந்தாரே னும், அவருடைய அயன்மையும் தனித்தமிழ் கலவைத்தமிழ் வேறுபாடறியாமையும், தமிழிலக்கணப் புலமையின்மையும், அகராதிப் பணியைச் செவ்வனே ஆற்றுதற்குத் தடையாயிருந்தன. அகராதிப்பணிக் குழுவிலிருந்த சமற்கிருதப் பண்டிதர்மட்டுமன்றித் தமிழ்ப் பண்டிதரும், தனித் தமிழாற்றல் அற்றவராகவே யிருந்தனர். அகராதிக் குழுவுறுப்பினருள் ஒருவரான பண்டாரகர் (Dr.) உ. வே. சாமிநாதையரும் தனித்தமிழ்ப் பற்றற்றவரே.

இடைக் கழகக் காலத்திலிருந்தே பிராமணர் தென்னாட்டிற்கு வந்து கொண்டிருந்தும், இற்றைத் தமிழ்நாட்டுப் பிராமணர்க்குப் பெரும்பான்மை தமிழும் சிறுபான்மை தமிழொடு திரவிடமும் தாய் மொழியாயிருந்தும், அவர் முன்னோரது இலக்கிய மொழியாகிய சமற்கிருதத்திலேயே அவர்க்குப் பற்றுளது. என்றும் சமற்கிருதத்தைத் தலைமையாகவும் தமிழை அதற்கு அடிப்படுத்தியும் வைத்தலே அவர்க்கு விருப்பம். தமிழரொடு உறவாடாமை, தமிழ்ச்சொல்லை விரும்பாமை, வடசொல்லையே பெரும்பாலும் வழங்குதலோடு தமிழர் வழக்கிலும் புகுத்துதல், ஆகிய கரணியங்களால் தூய தமிழ் வழக்கை இன்னும் அவர் சரியாய் உணர்ந்து கொள்ளவில்லை. அதனால், நச்சினார்க்கினியர் நகைச் சுவைக்கு ஆரியர் தமிழை எடுத்துக் காட்டியதற்கு இலக்காக, அம்மை போடுதலை அம்மை போட்டுதல் என்று அகராதியிற் குறித்திருக்கின்றனர். பிராமணர்க்குத் தென்னாட்டில் தலைமையான செல்வாக்கு உள்ளவரை அல்லது அவர் உண்மையான தமிழன்பர் ஆகும்வரை, இந்நிலைமையே நீடிக்கும். சமற்கிருதத்தைத் தேவ மொழியென்று நம்புதற்கேற்ற பேதைமை பண்டைத் தமிழ் நாட்டில் மிகுதியாய் இருந்ததேனும், இற்றைத் தமிழ் நாட்டில் அத்துணையில்லை. அறிவு வளர வளரப் பழைய மட நம்பிக்கை படிப்படியாய் ஒழியும். ஆதலால், காலத்தின் இயல்பிற்கேற்ப அவர் தம் கருத்தை மாற்றிக் கொள்க. தன்னலம் பற்றித் தமிழைக் காட்டிக் கொடுக்கும் ஒரு சில தமிழ்ப் பேராசிரியரைக் கண்டு, தவற்றில் நிலையற்க. இது அவர் மீது பற்றுவைத்துச் சொல்வதே யன்றிப் பகைகொண்டு சொல்வதன்று. உலக முழுவதையுந் தழுவிய ஒரு பெரு வரலாற்றுண்மையை மறைப்பது நன்றன்று.

Digitized by Viruba

# VIII. சென்னைப் பல்கலைக் கழக அமைப்புக் குறைகள்.

## (1) அதிகாரிகள்

சென்னைப் பல்கலைக் கழகக் கண்காணகர் (Chancellors) ஆங்கிலேய ஆட்சிக் காலமெல்லாம் ஆங்கிலேயரா யிருந்தனர். அதனால், அவர் தமிழ் வளர்ச்சியில் அக்கறை கொள்ளவில்லை. அதன்பின், தமிழ் நாட்டிற்கு விடுதலை வந்ததென்று சொல்லப்பட்டும், தமிழரோ, தமிழறிந்தவரோ, தலைவராகாது, தமிழறியாத வட நாட்டாரே தலைவராகி வருகின்றனர்.

பல்கலைக் கழகத் தமிழகராதி தொகுக்கப்பட்ட காலமெல்லாம் (1913—1939) துணைக் கண்காணகராயிருந்தவரும் தமிழறியாதாரும் தமிழ்ப்பற்றற்றவருமான ஐரோப்பியரும் பிராமணரும் தெலுங்கரும் மலையாளியருமே. யாரேனும் ஒருவர் தமிழக்குடிவழிவந்து தமிழக்குலப்பட்டப் பெயரே தாங்கித் தமிழரென்று கருதத்தக்கவராயிருப்பினும், அவர் தம்மைத் தெலுங்கரென்று சொல்பவராயும், பல்கலைக் கழகச் சொற்பொழிவுகளையெல்லாம் ஆங்கிலத்திலேயே ஆற்றுபவராயும் தனித் தமிழை வெறுப்பவராயுமுள்ளனர். எதிர்காலத்தில் பண்டாரகர் **மணவாள இராமானுசம்** போன்றவர் துணைத் தலைவரானலொழிய, சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் வளர்தற்கிடமேயில்லை.

பல்கலைக் கழக ஆட்சிக் குழுவுறுப்பினருள்ளும், தமிழ்ப் புலவரோ, தமிழ் மரபைப் போற்றுபவரோ, ஒருவருமில்லை. வடமொழிச் சார்பான ஒரு கட்சியாட்சியைத் துணைக்கொண்டு, வடமொழிக்கின்றுள்ள தலைமையை நிலைநிறுத்திவிடவேண்டுமென்பது, கண்ணுடிக் கூடைக்காரன் கனவாகவே முடியும்.

## (2) தமிழ்த்துறைத்தலைவர்

மொழித்துறையில் தமிழ் நாட்டிலும் சமற்கிருதமே தலைமையாயிருப்பது போல், கூட்டரவு (சமுதாய)த் துறையில் வடமொழிப்பற்றுள்ள பிராமணரே தலைமையாயிருப்பதால், தனித் தமிழ்ப்பற்றுள்ள ஒரு புலவரும் சென்னைப் பல்கலைக்கழகத்தில், பொறுப்பு வாய்ந்த தமிழ்ப் பதவியைத் தாங்கும் நிலைமையிருந்ததில்லை. அதனால், பட்டம் பதவி பெறுவதையும் பெரும்பொருளீட்டுவதையும் குறிக்கோளாகக் கொண்ட தனித்தமிழ்ப் பற்றற்ற தமிழ்ப் புலவரே, பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராக முடிந்தது.

**மறைமலையடிகள்** ஒருவர் தவிர மற்றெல்லாத் தமிழ்ப் புலவர்க்குள்ளும், சிறப்பாகக் கல்லூரி பல்கலைக்கழகப் பேராசிரியர்க்குள், அழுக்காறு இன்னும் போகவில்லை. பதவி சற்று உயர்ந்தவுடன், அதனொடு செல்வமுஞ் சற்றுச் சேர்ந்துவிடின்

Digitized by Viruba


"சிறியரே மதிக்குமிந்தச் செல்வம்வந் துற்றஞான்றே
வறியபுன் செருக்குமூடி வாயுள்ளோர் மூகராவர்
பறியணி செவியுளாரும் பயிறரு செவிடராவர்
குறிபெறுங் கண்ணுளாரும் குருடராய் முடிவரன்றே."

என்னுஞ் செய்யுட்குச் சிறந்த இலக்கியமாகி விடுகின்றனர். ஒரு தேர்வும் தேறாத ஒருவர் ஒரு பல்கலைக்கழகத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராகிவிடின், தம்மினுஞ் சிறந்தார் ஒருவருமில்லையென்று காட்டவேண்டி, நெஞ்சாரப் பொய்த்து வாயாரத்துணிந்து தன்னேரில்லாத் தமிழாராய்ச்சியாளரையும் தமிழ் வெறியன் என்றும், திராவிடர் கழகத்தான் என்றும், வடமொழிப் பகைவன் என்றும், கோணமதியன் குறுக்குச் சூழ்ச்சியன் (குயுக்தியான்) என்றும், கூறி மறைத்துவிடுகின்றனர். தமிழறிவற்ற தலைமை யதிகாரிகளும், அவர் ஒரு மேடைப் பேச்சாளராயின் அவரை மேலான புலவரென்று கருதி மேம்படுத்தி விடுகின்றனர். "அரசன் முத்திஞல் அரம்பை" என்னும் பழமொழிக்கேற்ப, அவ்வாசிரியரும் தம்மைத் தலைமையாகக் கருதி அறியாத்துறைக்கும் அதிகாரிக ளாகி விடுகின்றனர். இத்தகைய ஆசிரியர், தன்னலமொன்றே கருதித் தமிழைக் கெடுப்பதுடன் காலத்திற்கேற்பத் திருந்திவரும் பிராமணரையுங் கெடுக்கின்றனர்.

சென்னைப் பல்கலைக் கழகம் மற்றப் பாடத்துறைகட்கெல்லாம் அவ்வத் துறையில் தலைமைப் பட்டம் பெற்ற தகுதியாளரையே அமர்த்துகின்றது. ஆயின், தமிழுக்கு மட்டும் சட்டத்துறைப்பட்டம் அமையுமென்று கருதுகிறது. அதோடு கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரெல்லாம் தமிழ் மொழிநூலதிகாரி களென்றும் கருதிக்கொள்கிறது. இதனால், அவ்வாசிரியரும் தம்மைத் தவறாக மதித்துக் கெடநேர்கிறது.

காலஞ் சென்ற பண்டாரகர் **ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள்,** சேலத்தி லிருந்து நான் விடுத்த சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதித் திறனாய்வைப் பற்றி, **பர். இலக்குமணசாமிமுதலியார்** அவர்களிடம் உண்மையை எடுத்துச் சொல்லியிருப்பின், இதற்குள், அவ்வகராதி முழுதும் செவ்வனே திருத்தப் பெற்றிருக்கும். ஆயின், அவரே அதற்குத்தடைநின்றார். நான் கடந்த முப்பானாண்டுகளாக மொழியாராய்ச்சியும் சொல்லாராய்ச்சியும் முறைப்படி செய்து வந்திருந்தும், கால்டுவெலுக்குப்பின் அறிவியன் முறையில் ஒருவரும் தமிழ்ச் சொல்லாராய்ச்சி செய்யவில்லையென்று, துணிந்து எழுதினார். **பர். சேதுப்பிள்ளை** சொல்லாராய்ச்சிக்கும் என் சொல்லாராய்ச்சிக்கும் வேறு பாடு, கீழ்க்குறித்தவற்றினின்று அறிஞர்தாமே அறிந்துகொள்க.

சென்னைப் பல்கலைக்கழக அகராதியைத் திருத்துவது **சேதுப்பிள்ளைக்கு** விருப்பமன்று. அவ்வகராதி சென்னைப் ப. க. கழகத்தைக் கடுங்கறைப்படுத்திய கருசெயல்வடிவாய் இருந்தும், அவர் அதை அப் ப. க. க. தமிழுக்குச் செய்த

Digitized by Viruba

தலைசிறந்த தொண்டென்று அதன் வெள்ளிவிழாவிற் புகழ்ந்தார். இத்தகைய கருத்துடையவர் அதை யெங்ஙனந் திருத்த இசைவர்? அவர் கருதியபடியே அவர் காலமெல்லாம் அது திருத்தப்படாமற் போயிற்று.

| சொல் | சேதுப்பிள்ளை யாராய்ச்சி | என் ஆராய்ச்சி |
|---|---|---|
| அணில் | அணி = அழகு, அழகான மூவரிகளை முதுகிலுடையது அணில். | அணி = வரி, வரிசை. மூவரிகளை முதுகிலுடையது அணில். |
| வேந்தன் | தீமையை நீக்குவதற்கு வெம்மையாகக் கோலோச்சுபவன் வேந்தன். வெம்மை, வேகு, வெயில் என்பனவும் வேந்தன் என்பதும் ஒருவேரினின்று பிறந்தவை. | வேய்ந்தோன் – வேந்தன். வேவு என்பதிற்போல் யகரமெய்தொக்கது. வேய்தல் = முடியணிதல். முதற் காலத்தில், தமிழ் நாட்டில் முடியணியும் உரிமை முத்தமிழ் வேந்தர்க்கேயிருந்தது. கொன்றை வேய்ந்தோன் – கொன்றை வேந்தன். |
| பள்ளி | முதற்பொருள் இடம் என்பது. பிறபொருள்கள் பிந்தியவை. | முதற்பொருள் படுக்கை அல்லது படுக்கையறை என்பது. பிறபொருள்கள் பிந்தியவை. |
| அகவிலை | அகவிலை ஏறிவிட்டது என்பதில், 'அகவிலை' என்பது 'அதிகவிலை'. | அகவிலை என்பது அஃகவிலை என்பதன் மரூஉ. அஃகம் = தவசம், கூலம். |

**சேதுப்பிள்ளை** ஒருமுறை அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு மண்டபத்தில் கல்வி யமைச்சர் தலைமையில் பேசியபோது, மொழிநூலறிவின் இன்றியமையாமைக்குச் சிற்றம்பலம் சிதம்பரம் எனத் திரிந்ததை எடுத்துக் காட்டினார். இது சொல்லாராய்ச்சியின் (Etymology) ஒரு பிரிவான இடப்பெயராராய்ச்சியே (Toponomy) யன்றி மொழியாராய்ச்சியன்று. மொழியாராய்ச்சி செய்யாதவர் சொல்லாராய்ச்சியில் இறங்குதல் கூடாது. இறங்கின், பல சொல்வேர்களைத் தவறாகக் காட்ட நேரும். சில வேர்கள் சரியாயிருப்பின் அவை எவரும் எளிதாய்க் கண்டு கொள்ளத்தக்கனவாயிருக்கும்; அல்லது, ஏரலெழுத்துப்போல் அமைந்தனவாயிருக்கும்.

இனி ஒருசில தமிழ்ப்பேராசிரியர், தாம் மொழிநூல் கற்றிருப்பதுபற்றி என் ஆராய்ச்சியை இகழ்வதாகத் தெரிகின்றது. கல்வி வேறு, ஆராய்ச்சி

Digitized by Viruba



வேறு என்பதையும், என் கல்விப்பரப்பையும் ஆராய்ச்சியாழ்வையும், அவர் இன்னும் அறிந்திலர். அவர் உண்மையில் என்போன்று ஆராய்ந்தவராயின், சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் இல்லாச்சொற்களையும் இல்லாப் பொருள்களையும் உள்ள பிழைகளையும் எடுத்தெழுதுவாராக; அறைகூவி அழைக்கின்றேன். என்னைத்தவிர வேறெவரும் இப்பணியைச் செய்யவியலா தென்று அறிந்திருந்தும், தமிழ் கெடினும் தம்பெயர் கெடக்கூடாதென்று அவ்வகராதித் திருத்தத்தைத் தடுத்துவிட்டனர்.

இனி, சென்னைப் பல்கலைக்கழகம் தொகுத்த அகராதிக்குறைகளை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் எடுத்துக்காட்டக்கூடாதென்றும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழைத்தூய்மையாக அல்லது சிறப்பாக வளர்ப்பின் பல்கலைக் கழக நல்கைக்குழு (U. G. C.) நல்கும் நல்கை குன்றிவிடுமென்றும், இருகருத்துக்கள் உலவி வருகின்றன.

இவற்றையெல்லாம் நோக்கும்போது, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியைத் திருத்தவேண்டிய முழுப்பொறுப்பும், கடமையும், சென்னைப் பல்கலைக்கழகத்தையே சார்கின்றது. அகராதியைப்பற்றிக் குறைகூறினால் வேலை போய்விடுமோவென்றும், தேர்வாண்மையும் (Examinership) பாடக் குழுவுறுப்பாண்மையும் (Membership of Board of Studies) பிறவாய்ப்புக்களும் நீங்கி விடுமோவென்றும் ; தமிழ்ப்பற்றுள்ள தமிழ்ப்பேராசிரியரும் அஞ்சி வாய்திறவாதிருக்கும் நிலையில், பொதுமக்கள் பணத்தில் பெருந்தொகையைச் செலவிட்டுப் பக்கந்தொறும் பிழைமலியத் தொகுத்ததும், தமிழ் வடமொழிக்கிளையான ஒரு கலவைமொழியென்று காட்டித் தமிழுக்குக்கேடும் தமிழனுக்கு இழிவும் உண்டாக்குவதுமான (4351 பக்கங்கொண்ட) அகராதியை உடனே திருத்த ஏற்பாடு செய்யுமாறு, இத்தமிழாட்சிக் காலத்திலேனும் தமிழ்க்கழகங்களும் பொறுப்புவாய்ந்த பொதுமக்களும், சட்டசவை யுறுப்பினரும், சென்னைப் பல்கலைக்கழக அதிகாரிகளை வற்புறுத்துவாராக.

சென்னைப் பல்கலைக்கழகம் செய்த வழுவைச் சென்னைப் பல்ககலைக்கழகமே களைதல்வேண்டும். அப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் பணியாற்றுமாறு தகுதியுள்ள எவரையும் அமர்த்திக்கொள்ள, அப்பல்கலைக்கழக அதிகாரிகட்கு முழு உரிமையுண்டு. ஆயின், தகுதியில்லாதவரையமர்த்தித் தமிழைக் கெடுக்க அதிகாரமோ உரிமையோ அவர்கட்கு அணுவளவுமில்லை. ஆதலால், சென்னைப் பல்கலைக்கழகம் அது வெளியிட்ட அகராதியை உடனே திருத்தாவிடின், **தமிழுக்கென்று தனிப் பல்கலைக்கழகமே நிறுவப்பெறுதல் வேண்டும்.**

Digitized by Viruba

# அடுத்து வெளிவரும் நூல்கள்.

1. தமிழ் வரலாறு
2. பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும்
3. தமிழர் வரலாறு
4. தமிழர் மதம்
5. தமிழ்நாட்டு வரலாறு
6. வடமொழி வரலாறு
7. மொழிநூற் கட்டுரைகள்
8. ஆங்கிலத் தமிழ்ச்சொற் களஞ்சியம் (அகராதி)

சேலம் கூட்டுறவு அச்சகம், சேலம் - 1. அஞ்சல் பெட்டி எண். 108